உ

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

# SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

Charity No: 1014409

அம்மனைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்



# வெள்ளி விழா


## SILVER JUBILEE

## 1991-2016

ஓம் ஸ்ரீ மகா கணபதியே போற்றி



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ் சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை



















**BUCKINGHAM PALACE**

20th December, 2016.

Dear Mr. Kesavan,

I have been asked to thank you for your kind letter to The Queen which you have sent on behalf of the Shri Kanagathurrkai Amman (Hindu) Temple Trust, on the occasion of your Silver Jubilee Celebrations which are being held on 15th January

Her Majesty appreciates your thoughtfulness in writing as you did and, in return, sends her best wishes to all those who will be present for a most successful event.

Yours sincerely,

Christopher Sandamas

Christopher Sandamas
Chief Clerk to The Queen

Mr. K. Kesavan.



10 DOWNING STREET
LONDON SW1A 2AA
www.gov.uk/Number10

From The Direct Communications Unit

21 December 2016

Dear Mr Kesavan

I am writing to thank you for your correspondence of 4 December, inviting the Prime Minister to the Shri Kanagathurrkai Amman Temple Trust Silver Jubilee Celebration on 15 January 2017.

The Prime Minister greatly appreciates your kind invitation. However, owing to the enormous pressures on her diary she will sadly be unable to attend on this occasion. It is with much regret that I must therefore send her apologies. I hope the event proves to be a great success.

With best wishes.

Yours sincerely

Correspondence Officer

Mr K Kesavan

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

**Justice C.V.Wigneswaran**
**Chief Minister – Northern Province**


தொலைபேசி / දුරකථනය / Telephone: 021 221 7311, 021 221 7313
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 221 7227

26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
26, සෝමසුන්දරම් ඇවනිය, චුන්ඩුකුලි යාපනය
26, Somasundaram Avenue, Chundukkuli, Jaffna
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email: cmofficenorthernpc@gmail.com


நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்
මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන අමාත්‍යවරයා
Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Industries and Enterprise Promotion, Tourism. Local Government and Provincial Administration

---

எனது இல / මගේ අංකය / My No: NP/CM/Res/Gree/2016

திகதி / දිනය / Date: 08.08.2016

## லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை ஆலயத்தின் வெள்ளி விழா மலருக்கான இலங்கை வடமாகாண சபை முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

உலகில் இந்துக்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இந்துக் கோவில்களை அமைப்பதற்கும் வழிபாடுகளை நிகழ்த்துவதற்கும் பின்நிற்பதில்லை. அந்த வகையில் லண்டன் மாநகரத்தில் குடியேறிய எம் மக்கள் தாம் வணங்குவதற்கும் இறை பக்தியை செலுத்துவதற்கும் ஏற்ற ஒரு ஆலயமாக ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தை அமைத்தது மட்டுமன்றி அவ் ஆலயத்தின் நித்திய நைமித்தியங்கள், விஷேட ஆராதனைகள், வருடாந்த உற்சவங்கள் என அனைத்து சிறப்புக்களுடனும் தனது 25 வருட நிறைவை கொண்டாடுவதற்கு திருவருள் கூடியுள்ள நிலையில் வெளியிடப்படவிருக்கும் விஷேட வெள்ளி விழா மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை இலங்கையின் வடபகுதியில் இருந்து அனுப்பி வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இங்கு பிறந்து வளர்ந்து எம்நாட்டைவிட்டு வெளியேறியோர் இந்து மதத்தில் பற்றுக்கொண்டிருப்பதில் வியப்பில்லை. ஆனால் பிரித்தானிய மண்ணில் பிறந்து அந்த மண்ணிலேயே வளர்ந்து அங்குள்ளவர்களுடன் கூடிப் பழகி அவர்களின் கலாச்சாரங்களில் திளைத்திருக்கக்கூடிய நிலையிலும் இந்து சமயத்தின் அல்லது சைவ சமயத்தின்பால் நாட்டமுள்ளவர்களாக, இறைபக்தி கொண்டவர்களாக, சரஸ்வதி கடாட்சம் பெற்று பஞ்ச புராணத்தை முறையாக ஓதக்கூடியவர்களாக, தில்லை நடராஜனின் நர்த்தனத்திற்கு ஒப்பான நர்த்தகர்களாகவோ அல்லது நர்த்தகிகளாகவோ விளங்குபவர்களாகவும், சிறந்த சங்கீத ஞானத்தை கொண்டவர்களாகவும், தமது இன்னிசைக் குரலால் இறைவனை துதி பாடி அர்ச்சிப்பவர்களாகவும், கீழைத்தேய வாத்தியங்களையும் இசைக்கருவிகளையும் நன்கு இசைக்கக் கூடியவர்களாகவும் எமது மூன்றாவது சந்ததியினர் விளங்குவது எம்மவர்களை மலைக்க வைக்கின்றது.

இலங்கையில் இருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் பிற தேசங்களில் வாழ்கின்ற எம்மக்கள் மொழி, கலாச்சாரம், மதம் ஆகியவற்றில் கூடிய நாட்டம் கொண்டவர்களாக ஆலயங்களை அமைப்பதும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் இறைவனின் செயல் எனவே நாம் கருதுகின்றோம். அந்த வகையில் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் சிறப்புற அமையவும் இவ் ஆலயத்தை தினமும் கைகூப்பி தொழக்கூடிய அடியவர்களின் குறை தீர்க்கும் அம்மனின் அருளாட்சி லண்டன் மாநகரில் வாழும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ கனக துர்க்கை அம்மனை வேண்டித் துதித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்



# ஓம் சக்தி
# வெள்ளி விழாக்காணும் ஸ்ரீ கனக துர்க்கை அம்பாள்
# ஆசியுரை

எல்லாம் வல்ல அம்பிகையின் திருவடி பணிந்து அன்னையின் வெள்ளிவிழா சிறப்பாக நடை பெறுகின்ற வேளையில் அம்பிகையின் ஆலயம் ஆனது 1991ம் ஆண்டு ஆரம்பிரத்து 25 வருடங்கள் நிறைவு காண்கின்றது. இந்தக் காலங்களில் அடியவர்களுடைய சிந்தனையில் அம்பிகை எழுந்தருளித் தனக்கு ஆலயம் அமைப்பதற்கு ஏதுவாக அடியவர்களுடைய முயற்சினால் ஸ்ரீ கனக துர்க்கை என்கின்ற நாமத்தோடு அம்பாள் இலண்டனிலே ஈலிங் பதியினிலே கோயில் கொண்டு அருபாலித்துக் கொண்டு இருக்கின்றாள். இந்த நிலையில் ஆலய அறப்பணியார்களுடைய பெரும் முயற்சினாலும், அடியார்களுடைய உதவியாலும் அம்பிகையின் அருளினாலும் ஆலயம் பெரும் விருட்ஷமாக வளர்ச்சி அடைந்து இங்கு வந்து வழிபடும் அடியார்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றது. அதுமட்டும் அல்லாமல் இயற்கை, செயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தாயகத்தில் வாழ்கின்ற முதியோர்கள், சிறார்கள், கணவனை இழந்த பெண்கள் போற்றவர்களுக்குக் கல்வி கற்பதற்கு உதவி, சுயதொழில் வாய்ப்பு, நடக்க இயலாதவர்களுக்கு முச்சக்கர வண்டி போன்ற பெரும் உதவிகளையும் ஆலய அறப்பணியார்களின் அடியார்கள் முயற்சியினால் அவர்கள் வாழ்வதற்கு அம்பிகை அவர்களின் ஊடாக இப்பெரும் கைங்கரியத்தை செய்துவருகின்றனர். இனி வரும் 25 வருட காலங்களில் அதுமட்டு மல்லாமல் மேன்மேலும் இவ்வாலயம் வளர்ச்சியடைந்து இன்னும் பெரும் கைங்காரியங்கள் ஆற்றவேண்டும். அம்பிகையின் அருள் உலகம் முழுவதும் பிரகாசிக்க வேண்டும் அடியார்கள் யாவரும் அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழவேண்டும், எமது நாட்டிலும், உலகிலும் சாந்தியும் அமைதியும் நிலவ வேண்டும், என்று அம்பாளைப் பிரார்த்தித்து இந்த வெள்ளி விழா சிறப்பாக நடைபெற எனது ஆசிகளையும் கூறி அமைகின்றோம்.

இங்ஙனம்

**சிவஸ்ரீ கனக பாலகுமார குருக்கள்**

ஸ்ரீ ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயம்

# வாழ்த்துரை

எய்திட லாகும் இருவினையின் பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாங் கன்னி
மைதவம் கண்ணி நன்மாரி துர்க்கையொடு
கைதவம் இன்றிக் கருத்துறும் மாறே - திருமூலர்

சுந்தரி எந்தைத் துணைவி யென்பாசத் தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிஷன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே - அபிராமிப்பட்டர்

திரு தேவ சகாயம் அவர்கட்குத் திருவருளும் குருவருளும் நல்குவதாகுக!

இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் திருக்கோயில் ஸ்தாபிதம் செய்த 25ம் ஆண்டு வெள்ளிவிழா நடத்துவது அறிந்து மகிழ்ச்சி. அதனைத் தொடர்ந்து சிறப்பு மலர் வெளியிடுவது பாராட்டுதலுக்குரியது. இலண்டன் மாநகரில் ஈலிங் பகுதியில் சாம்பமூர்ததி சிவாச்சாரியார், ஹரிதாஸ் சுவாமிகள் முன்னின்று முதல் குடமுழுக்கு நடத்தினார். இரண்டாவது குடமுழுக்கில் நாம் கலந்து கொண்டு தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஜெயமகள், வெற்றித்திருமகள், மலைமகள், துர்க்கை, கொற்றவை எனப் பலவகை நாமங்களைக் கொண்டு திருக்கோயில்களில் வடக்குப் பக்கம் சண்டீசர் முன்பாகக் கோட்ட தெய்வமாக அமைக்கத் திருக்கோயில் அமைப்பு சாஸ்திரங்கள் பகர்கிறன.

இலண்டன் மாநகரில் ஸ்ரீ கனக துர்க்கைக்குத் தனிக்கோயிலாக அமைத்தும் மற்றைய மூர்த்தங்களைப் பரிவாரங்களாக அமைத்தும் செய்யப்பெற்றுள்ளது. "ஸ்ரீகனகதுர்க்கை" திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறுவதையும், தேர்த்திருவிழா வேறெங்கும் இல்லாத அளவிற்கு மக்கள் காவடி, அக்னி ஏந்தி, அலகு குத்தித், தமது நேர்த்திக்கடன் ஆற்றுவதையும் நாம் பலமுறை கண்டு தரிசித்துள்ளோம். துர்க்கை என்றால் துன்பத்தை நீக்குபவள் என்பது பொருள். அப்பொருளுக்கு ஏற்பத் தம் தாயகத்தில் போரினாலே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வீடு கட்டித் தருதல், திருக்கோயில் புனரமைப்பு, நல்லூர் ஆதீனம் புனரமைப்பு, மக்களுக்குக் கல்வி, உணவு முதலாய பணிகளுக்கு உதவி செய்து பதி புண்ணியத்திலிருந்து வரும் வருமானத்தை பசு புண்ணியத்துக்குச் செலவிடல் போன்ற நல்ல காரியங்கள் இத்திருக்கோயில் மூலம் நடைபெறுவது சிறப்புக்குரியது.

திருக்கோயில் என்றால் இறைவன் வீற்றிருக்கும் கருவறை. ஆலயம் என்றால் ஆன்மா (உயிர்) லயப்படுகின்ற இடம். ஸ்ரீ கனக துர்க்கை தேவி ஆலயத்திலே சமயம், சமுதாயம், கலை, கலாச்சாரம், பாரம்பரியங்கள் என எல்லா வகையிலும் வளர்த்து வரும் பெருமை ஈழ தமிழர்களிடையே கொண்ட கொள்கையும், இறைவழிபாட்டுச் சிந்தனையும் என்றால் மிகையாகாது. இத்திருக்கோயில் மூலம் மேலும் பல அறப்பணிகள் ஆற்றிடத் திருக்கோயில் தலைவர், செயலர், பொருளாளர், அங்கத்தினர், தேவஸ்தானக் கமிட்டியார், அறங்காவலர்கள், அன்பர்கள், அம்மையின் பக்தர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும் தருமையா தீனக் குருமணியின் குருவருளும் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வெள்ளவிழாவை அடுத்துப் பொன்விழா, மணிவிழா, முத்து விழா, மரகதவிழா, வைரவிழா, நூற்றாண்டு விழாக்கள் கண்டு சைவமும் தமிழும் தழைக்கச் சூரிய சந்திரர் உள்ளவும் திகழ்ந்திடவும், மலர் பக்தி மணம் கமழவும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்

**மௌன குமார சுவாமித் தம்பிரான்**

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகாசந்நிதானங்கள்
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607994 / 995
webpage: www.sivasiva.in

உ



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Holy Kailash Heritage Meikandar
Heirarchy - Kailai Guru Mani - His Holiness
**Dr. Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone: 0422-2607994 / 995
Email : perurmutt@yahoo.com

*குருமுதல்வர் (ஆதீனத்தலைவர்)*
Maha Mandalesvar
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்*
Thavathiru Santhaliga Adigalar Holymutt

*புரவலர்* - Patron

*உலக சைவப் பேரவை*
World Saiva Council

*தமிழகத் துறவியர் பேரவை*
Tamilnadu Saints Forum

*வளர்தமிழ் இயக்கம்*
Valartamil Iyakkam

*தலைவர்* - President

*சத்வித்யா சன்மார்க்க சங்கம்*
Sathvidhya Sanmarga Sangam

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்*
Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி*
Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி*
Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School

*ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி*
Gnambikai Matriculation School

*தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ் பள்ளி*
Thavathiru Aarumuga Adigalar Tamil School

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை*
Thavathiru Santhalinga Adigalar Memorial Trust

*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை*
Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust

*மாண்புசார் உறுப்பினர்*
Honourary Member

*விசுவ இந்து பரிசத்- அறவழிகாட்டும் ஆன்றோர் பேரவை*
VHP - Kendiriya Marg Darsak Mandal

*ஆச்சார்ய சபா* - Aacharya Sabha

காடு கிழாள் என்றழைக்கப்படும் தொன்மை வாய்ந்த தெய்வம் நம் பழமையான தமிழ் இலக்கியங்களால் போற்றப்படும் சிறப்பிற்குரிய தெய்வமாகும். இத்தெய்வத்திற்கு இலங்கைத் தமிழர்களால் இலண்டன் மாநகரின் ஈலிங் பகுதியில் உருவாக்கப்பட்ட அருள்மிகு கனக துர்க்கை அம்மன் கோயில் தற்போது வெள்ளி விழாவை நிறைவு செய்வது மகிழ்ச்சிக்குரியது.

இக்கோயிலைத் திருமிகு தேவசகாயம் அவர்களும் திருமிகு சிறீரங்கன் அவர்களும் மிகச் சிறப்பான முறையில் நடத்துவதோடு சமூகப் பணிகளையும் திறம்பட ஆற்றி வருகின்றனர். அவ்வகையில் அவர்களும் திருக்கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர்களும் எல்லா வளங்களையும் பெற்று வாழ எல்லாம் வல்ல சாந்தலிங்கப் பெருமானின் தண்ணருளை நினைந்து வாழ்த்துகின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளைய பட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
: +91-422 - 2607995, : 2607994
: +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com



சாந்தலிங்கர் தாள் மலர் வாழ்க

Kailai - Punithar
**Dr. Marudhasala Adihal**
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
: +91-422 - 2607995, : 2607994
: +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com

குருமுதல்வர்
அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தள், உதகை

இளையபட்டம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

செயலர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்வித்ய சன்மார்க்க சங்கம்

இயக்குநர்
சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி

சீர்வளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி

தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

இணைச் செயலர்
தமிழகத் துறவியர் பேரவை

மாவட்டத் தலைவர்
உலகத் திருக்குறள் பேரவை

தாளாளர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

முதல்வர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

ஒருங்கிணைப்பாளர்
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

உறுப்பினர்
தமிழகப் புலவர் குழு

மேனாள் உறுப்பினர்
ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்

## வாழ்த்துரை

தமிழர்களின் வழிபாடு மிகவும் தொமையான வழிபாடு. தங்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்து வாழ்ந்த தமிழர்கள் நிலத்தின் அடிப்படையில் தங்கள் வாழிடங்களை அமைத்துக் கொண்டு அதற்கேற்ப தெய்வங்களையும் வழிபட்டு வந்துள்ளனர் என்பதை நமக்குக் கிடைத்திருக்கும் முதல் நூலான தொல்காப்பியத்திலேயே அறிகிறோம். இத்தகைய சிறப்புக்குரிய தமிழர்கள் தமிழகம் மட்டுமல்லாது பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அவ்வகையில் தமிழர்கள் பெரும்பாலானோர் வாழும் நாடு இலங்கை. இலங்கையில் குடியுரிமை பெற்று தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்களின் சமய உணர்வு மிகவும் பாரட்டுதற்குரியது.

திரவியம் தேடுவதற்காக திரைகடல் தாண்டிச் சென்ற நம் தமிழர்கள் திரவியம் தேடுவதோடல்லாமல் சென்ற இடங்களிலும் திருக்கோயில்களை அமைத்து வழிபடத் தொடங்கினர். அதிலேயும் மாற்றுச் சமயக் கோயில்கள் வழிபாடற்றுக் காணப்பட்டால் அதை வாங்கித் தங்கள் சமயத் திருக்கோயில்களாக அமைத்து வழிபட்டு வருகின்றனர். அந்த வகையிலே 25 ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழர்கள் இலண்டன் மாநகரில் ஈலிங் பகுதியிலேயே அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் கோவிலை நிறுவி சிறப்பான முறையில் நடத்தி வருகிறார்கள்.

துர்க்கை அம்மன் என்றழைக்கப்படும் கொற்றவை தெய்வம் சங்க இலக்கியங்களான திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றிலும் தமிழின் முதல் காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் சிறப்பித்துப் பேசப்படுவதைக் காணமுடிகிறது. அவ்வகையில் தமிழரின் தொடர் வழிபாட்டுக்கு வழிகோலிய இந்தத் திருக்கோயிலைத் தெய்வத்திரு பொன்.தேவேந்திரன் அவர்களும் திரு.கலாநிதி அப்பையா தேவசகாயம் அவர்களும் நிறுவனர்களாக இருந்து 1991இல் அமைத்த இத்திருக்கோயில் இன்று ஆல் போல் தழைத்து அருகு போல் வேரூன்றி சிறப்பாகத் திகழ்ந்து வருகிறது.

மேலும் திருக்கோயில் மூலம் தமிழர் வழிபாட்டுப் பயிற்சி, தேவார, திருவாசக வகுப்புகள், திருவீதி உலாக்கள் போன்றவற்றையும் நடத்தி

கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளைய பட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு

: +91-422 - 2607995, : 2607994
: +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com


உ

சாந்தலிங்கர் தாள் மலர் வாழ்க


Kailai - Punithar
**Dr. Marudhasala Adihal**
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
: +91-422 - 2607995, : 2607994
: +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com


குருமுதல்வர்
அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தள், உதகை

இளையபட்டம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

செயலர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்வித்ய சன்மார்க்க சங்கம்

இயக்குநர்
சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி
சீர்வளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி
தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

இணைச் செயலர்
தமிழகத் துறவியர் பேரவை

மாவட்டத் தலைவர்
உலகத் திருக்குறள் பேரவை

தாளாளர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

முதல்வர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

ஒருங்கிணைப்பாளர்
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

உறுப்பினர்
தமிழகப் புலவர் குழு

மேனாள் உறுப்பினர்
ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்

வருகிறார்கள். சமயப் பணி என்ற அளவில் நின்றுவிடாமல் சமுதாயப் பணிகளையும் சிறப்பாக ஆற்றிவருகிறார்கள். குறிப்பாக ஏழை மாணவர்களுக்குக் கல்வியையும் மருத்துவத்தையும் அளித்து வருவது பாராட்டுதற்குரியது. திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் வழிகாட்டுதலின் வண்ணம் இலண்டன் லூசியம் சிவன் கோயில், ஈலிங் அருள்மிகு துர்க்கை அம்மன் கோவில், உயர்குன்று முருகன் கோயில் ஆதிய கோயில்களின் அடியார்களைத் திரட்டி மேற்குலக சைவ மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்கள். சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் என்ற அமைப்பின் பெயரில் நடந்த இம்மாநாட்டிற்கு நாமும் பலமுறை கலந்து சிறப்பித்துள்ளோம்.

அவ்வகையில் சிறப்பான பல பணிகள் ஆற்றிவரும் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. சிறீரங்கன், செயலர் திரு. அப்பையா தேவசகாயம், நிர்வாகக் குழு தலைவர் திரு. இரத்தினசிங்கம், செயலர் திரு. கேசவன் மற்றும் செயற்குழு அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தாங்கள் ஆற்றிவரும் சமயப்பணிகள், தமிழ் வகுப்புகள், இசை வகுப்புகள், நுண்கலை வகுப்புகள் மற்றும் மேற்குலக சைவ மாநாடுகள், கல்வி மாநாடுகள் அனைத்தும் சிறக்க எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் பேரூரடிகளார் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

உ
சிவ சிவ
"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி – 630206
சிவகங்கை மாவட்டம்
☎ : 04577 – 264227

08 சனவரி 2017

## வாழ்த்துரை

லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயம் வெள்ளிவிழாக் காண இருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி!

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிவுடைய பேரன்புடைய கனகதுர்க்கை லண்டன் மாநகரில் கொலுவிற்றிருந்து லண்டன் மாநகர மக்களையும் உலக மக்களையும் தம் அருள் பெருக்கால் காத்து வருகின்றது.

ஸ்ரீகனகதுர்க்கை, அகிலத்தை காக்கும் அன்னை அவள்!

அப்பனாக, அம்மையாக, ஐயனாக நம்மைக் காத்து அருளும் அன்னை ஸ்ரீகனகதுர்க்கையின் அருள் அகிலம் எல்லாம் பரவட்டும்.

25 ஆண்டுகளாக லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை ஆலயத்தை செம்மையாக நிர்வகித்து வரும் அறங்காவலர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்!

அன்னை ஸ்ரீகனகதுர்க்கை அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி....

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

(பொன்னம்பல அடிகளார்)





# SHREE GHANAPATHY TEMPLE

125 – 133 Effra Road, London SW19 8PU Tel: +44 (0)20 8542 2267 / 8542 7482
Website: www.ghanapathy.co.uk Facebook: https://www.facebook.com/sgtempleuk

It is with great pleasure that I give this message, on the very special occasion of the Silver Jubilee of your Temple.

Twenty-five years of dedicated service by your devotees, priests, executive committee and board of Trustees has created a truly inspirational Temple, whose charitable work and service is known and respected both nationally and internationally. It has been truly wonderful to see the great strides you have made in developing this beautiful Temple and, at the same time, the astounding charitable work that you have done for the Tamils in Sri Lanka, who have suffered so terribly during the ethnic violence in our motherland. The depth and scale of the charitable work, that you and your devotees undertake with such passion and devotion, has established your temple as a leading light for those who live with the understanding that "Makkal Servai Mahesan Servai" (Service to Man is Service to God), and you are an inspiration to us all.

Through the many years that we have worked together as part of the Federation of Saiva (Hindu) Temples, we have watched with great admiration the way that you have nurtured and supported your children to become a vibrant group of young men and women, who have an incredible passion for their faith, culture and mother tongue; and we know that they will take your Temple forward to even greater heights in the future. With absolute faith in our Divine Mother, we know that your Silver Jubilee will celebrate the very best of what you have achieved over the last 25 years, and we very much look forward to joining you to celebrate your commitment, love and devotion to the Divine Mother, and to her abode in Ealing, as you continue your exemplary efforts to serve the spiritual and emotional needs of our Hindu community in the UK.

To the Trustees, Management Committee, Temple Priests and devotees of the Sri Kanagathurkkai Amman Temple – the Co-ordinators, Management Committee, Temple Priests and devotees of the Shree Ghanapathy Temple send their best wishes and prayers to you on this very special occasion. May our beloved Lord Ghanapathy shower His choicest blessings upon all who have worked so hard to organise this special day, as you look back on your first 25 years, and also look forward to your next 25 years, under the divine Inspiration and Blessings of His Divine Mother.

Sincerely,
In humble service to our beloved Lord Ghanapathy,
Dr. S. Maheshwaran,
(Co-ordinator, Shree Ghanapathy Temple

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE


OM MURUGA

REGISTERED CHARITY NO: 271097

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF

TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407

www.londonsrimurugan.org



**BOARD OF TRUSTEES**

Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

**PRESIDENT**

Mr. S. Sampathkumar

**VICE PRESIDENTS**

Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

**SECRETARY**

Mr. P. Dakshinamoorthy

**ASST. SECRETARY**

Mr. R. Panneerselvam

**TREASURER**

Mrs. P. Raguvaran

**ASST. TREASURER**

Mr. G. Sathiamoorthy

**EXECUTIVE COMMITTEE**

Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. R. Sukumaran
Miss. V. Thambyrajah
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar


உ

ஸ்ரீ முருகன் துணை

திரு க கேசவன்
செயலாளர்
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோயில் அறக்கட்டளை

24.12.2016

திரு கேசவன் அவர்களுக்கு வணக்கம்.

இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் ஈலிங் என்றழைக்கப்படும் புண்ணிய ஷேத்ரத்தில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலயத்தின் 25வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு எதிர்வரும் 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை வெள்ளிவிழா வைபவம் நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

மனிதப்பிறவியினுடைய பயனையும் இப்பிறவி மேன்மையடைவதற்கான வழியையும் ஆத்மா பேரின்பமடைய அருளையும் வழங்குகின்ற தெய்வங்கள் உறையும் திருத்தலமே கோயில்களாகும்.

உலக அன்னையாம் பராசக்தியின் வடிவமாகிய ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனுக்கு ஆலயம் அமைத்து நித்திய நைமித்திக காம்ய பூஜைகளை குறைவற நடத்தி உலக அமைதிக்காக சிறப்பு வழிபாடுகளை ஏற்பாடு செய்து அன்னையின் அருளை பக்தப்பெருமக்கள் அனைவரும் பெற்றிடவும், ஆலய வருமானத்தில் ஒரு பங்கை தாயகத் துயர்துடைப்பிற்காக அனுப்பி சமயத்தோடு கூட சமுதாயத்தையும் பாதுகாத்து பேணி வருகின்ற ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய 25வது ஆண்டு நிறைவினை சீரும் சிறப்புமாக நடைபெறவும் அன்னையின் அருள் உலகெங்கும் பரவி மக்கள் மனமகிழ்ச்சியோடு வாழவும் அன்னையின் அருட்பணிகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து சமய சமூக தொண்டாற்றி சேவை புரியும் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலய அறங்காவலர்கள், நிர்வாக சபையினர், அர்ச்சகபெருமக்கள் மற்றும் பக்தகோடிகள் அனைவரும் பல்லாண்டு வாழ்ந்து பேரின்பமடைய வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்

சினி சம்பத்குமார்
தலைவர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாக சபை சார்பாக






**SRI RAJARAJESWARY AMMAN TEMPLE**

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்**

**Parasakthi Hindu Temple Trust**

**No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE**

**Tel: 020 8393 8147**


ஓம்
சிவமயம்
அம்பாள் துணை

# ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய 25ஆவது ஆண்டு நிறைவு விழா


இ.குணசிங்கம்

தலைவர்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்


வாழ்த்துச் செய்தி

இலண்டனில் ஈலிங் மாநகரில் 25 வருடங்களாக எழுந்தருளி அருளாட்சி செய்து எம்மை எல்லாம் காப்பவள் கனக துர்க்கை அம்பாள். கனகதுர்க்கை அம்பாள் எழுந்தருளியிருக்கும் ஆலய வெற்றிவிழா கொண்டாட்டங்கள் இனிதே நடைபெற தென் மேற்கு இலண்டனில் ஸ்ரோலி மாநகரில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம் தம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

மனித வாழ்வில் பெண்மையின் பங்களிப்பு முக்கியமானது. பெண்மையின் பேராற்றல் வழிபாட்டு நிலையில் சிறப்பாக உணரப்பட்டுள்ளது. பெண் எல்லாவற்றையும் பக்குவமாக பேணும் தன்மை உடையவள். குடும்ப நிலையில் எல்லார்க்கும் வழிபாட்டு முறைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியராக அவள் மாறுகிறாள். இந்து மதத்தில் மனிதனுடைய பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு வழிபாட்டு முறைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அவற்றை செய்வதற்கு பெண்ணுடைய பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வழிபாடு வீட்டு வழிபாடு கோயில் வழிபாடு என இருவகைப்படும். மேலும் ஒளியில் இறைவனைக் காணும் மரபு பெண்களால் பேணப்பட்டு வருகிறது.

'வருவாய்க்குத்தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் - திருவாக்கும்
தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர்ச் சிறப்பு'

இதுவே பெண்கள் காலாகாலமாக பேணிக்காக்கும் மரபு.

அன்னியர் ஆட்சி நம்நாட்டில் நிலவிய காலத்தில் பெண்கள் வெளிவழிபாட்டில் பங்கேற்பது கஸ்டமாக இருந்து. எனினும் உலக ஆரம்பம் தொடக்கம் பெண்ணின் பெருமையை உணர்ந்தவர்கள் நம் மக்கள். அதனால் அன்றோ நம் மக்கள் பெண்ணை தெய்வமாக வழிபட்டனர். இதை உணர்ந்த மாணிக்கவாசக சுவாமிகள், பெண்ணை சக்தியாக சித்தரித்து அவளின் பெருங்கருணையை வியந்து

' தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்'

என திருவெம்பாவையில் போற்றுகிறார். பெண் மிகுந்த இரக்க குணம் படைத்தவள். அப் பெண்ணை அன்னையாகவும் தெய்வமாகவும் போற்றி வழிபடுபவர்கள் தமிழர்கள். அவர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் தமது பண்பாட்டையும் கலாச்சார விழுமியங்களையும் பரப்பி சென்றுள்ளார்கள்.

தாம் பிறந்த மண்ணில் இடம்பெற்ற இனக்கலவரங்களால் புலம் பெயர்ந்து இம்மண்ணில் வாழும் தமிழ் மக்கள் தமக்கு வீரத்தையும் கல்வியையும் மற்றும் சகல செல்வங்களையும் தரும் (அன்னையை) கனகதுர்க்கை அம்மையாக ஈலீங் மாநகரில் எழுந்தருளச் செய்து அவளின் நல்லாசிகளைப் தினமும் பெற்று தம் செயல்களில் ஈடுபட்டு வருவது போற்றக்குரியது. குழந்தையும், இளமையும், முதுமையும் பெண்மையால் நன்கு



# SRI RAJARAJESWARY AMMAN TEMPLE

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

**Parasakthi Hindu Temple Trust**
**No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE**
**Tel: 020 8393 8147**

உணரப்பட்டவை. எனவே மனிதனின் வாழ்வியலை செம்மைப்படுத்தும் அறிவும், அநுபவம், பொறுமை பெண்களிடம் தான் உண்டு. இதை பாரதியும்

'தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதங்காக்கும் மஹாசக்தி - அன்னை
அவளே துணையென் அனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்'

என்று அன்னையை துதித்துப் பாடியுள்ளார்.

நம் உறவுகளை பிரிந்து புலம் பெயர்ந்த மண்ணில் வாழும் நாம், எம் துயரங்களை தினமும் அன்னையிடம் முறையிட்டு அவள் அருளைப் பெற்று மனஅமைதியைப் பெறுவதே சிறந்த வழி என்பதை உணர்ந்தவர்கள். அதனாலன்றோ புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலும் தமிழ்மக்கள் அன்னைக்கு ஆலயம் அமைத்து வழிபட்டும் வருகிறார்கள். அஞ்ஞான இருளகற்றி மெய்ஞான ஒளியை தருபவை ஆலயங்கள் என்பதை உணர்ந்தவர்கள் எம் முன்னோர்கள். சமய அனுட்டாங்களை மாத்திரமல்ல, தமிழ் தெய்வீக கலைகளையும், அவர்களின் பாரம்பரிய பண்பாடுகளையும் அன்று தொட்டு இன்று வரை காத்து வளர்த்து, வளம்படுத்தி தந்தவை இவ்வாலயங்களே. ஆலயங்கள் அவர்களின் ஒழுக்கம், கல்வி, சாண்றாமை, மனிதநேயம் ஏன் மனுதர்மங்களை வளர்க்கும் இடமாக அமைந்த கல்வித் தலம் என்றால் மிகையாகாது.

மேலும் கனக துர்க்கை ஆலயம் தாயகத்தில் அல்லல் படும் தம் இனத்தின் கண்ணீரை துடைக்க இன்றும் தொண்டு செய்து வருகிறது. ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆறுதல் கூறி அவர்களை பாரமரிப்பது, ஊனமுற்றோர், முதியோர்களுக்கான மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது போன்ற மனிதநேயப் பணிகளில் முன்னின்று உழைத்து வருவதை எண்ணி நாம் பெருமையடைகிறோம். அதற்கு உறுதுணையாக ஈலீங் மாநகரில் எழுந்தருளி நித்தமும் தன்னை நாடிவரும் அடியவர்க்கு கனகதுர்க்கை அம்மை சகல சௌபாக்கியங்களையும் அருள்பாலிக்க நாமும் யாசிக்கிறோம்.

'ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்மெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத் தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அங்குச பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.'

அடியவர்க்கு சகல சௌபாக்கியங்களையும் அருள
எல்லாம் வல்ல ஸ்ரோலிப்பதி ஸ்ரீஇராஜராஜேஸ்வரி தேவஸ்தானம்.




Aum Muruga

# BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்

Established 1974, Registered Charity No : 269067

200A Archway Road, London N6 5BA.

Tel : 020 8348 9835. Fax : 020 8482 6508.

E-mail : admin@highgatehillmurugan.com

Web : www.highgatehillmurugan.org



Board of Trustees

*Chairman:*

Mr. A. Vairavamoorthy

*Secretary:*

Mr. K. Nagarajah

*Treasurer:*

Mr.S.Kesavan

Dr. V.P.Narayana Rao
Mr. K.Nithyananthan
Mr. M.Perinpanathan
Mr. S.M.Srikantha

Advisory Council:

Chairman:

Mr. A. Vairavamoorthy

Secretary

Mr.S.Pathmanathan

*Bankers:*

Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India

*Solicitors*

M/S Wimal & Co


## உயர்வாசற்குன்று முருகன் ஆலய வாழ்த்துச் செய்தி

இலண்டன் மாநகரில் ஈலிங் பகுதியிற் கோவில் கொண்டு அருளாட்சி செய்யும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலயத்தின் 25 ஆண்டுகள் நிறைவையொட்டி வெளியிடும் வெள்ளிவிழா மலருக்கு எங்கள் ஆலயம் வாழ்த்துச் செய்தி அனுப்புவதையிட்டு நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வளமான வாழ்க்கை வாழ தெய்வ வழிபாடு வேண்டும். கல்வியும்,செல்வமும் பெருக அம்பாளின் அருள் வேண்டும். அம்பாளை வழிபட, நல்ல அழகாக ஆலயம் அமைத்திருக்கின்றார்கள்.

இவ்வாலயம் லண்டன் மாநகரில் சைவ சமயத்தை வளர்ப்பதுடன் ஈழத்திற் கல்வியறிவற்ற சிறுவர்களுக்குப் பாடசாலை அமைத்து அங்கு தங்க வசதிகளும் செய்து கொடுத்திருக்கின்றது. இலங்கையின் பல பாகங்களிலும் ஆதரவற்ற பிள்ளைகள், வயது முதிர்ந்தோர் தங்குவதற்கு வதிவிடங்களும் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. இதனால் அம்பாளின் பெயர் ஈழத்தில் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் பெருகிப் பரவியுள்ளதுஇதனையிட்டு . தமிழ் மக்கள் அனைவரும் பெருமைப்படுகின்றனர்.

அண்டசராசரங்களுக்கும் தாயாக விளங்கும் அம்பாளுக்கு மலர் வெளியிடும் நிர்வாக சபையினர், அறங்காவற் குழுவினர் அனைவருக்கும் எல்லாம் வல்ல உயர்வாசற்குன்று முருகப்பெருமான் அருள்பாலிப்பாராக.

எல்லோரும் "இன்புற்றிருப்பதேயன்றி யாதொன்றுமறியேன் பராபரனே"
உயர்வாசற்குன்று சிவாச்சாரியர்களுடன், அறங்காவற்குழு, செயற்குழு சார்பில்

க.நாகராசா
செயலாளர்
**[B.H.T.T]**



# SREE KARPHAHA VINAYAGAR TRUST (TEMPLE)

**2-4 BEDFORD ROAD WALTHAMSTOW LONDON E17 4PX**
**(Charity No: 1092252)**
**Telephone: 020 8527 3819**

<u>வாழ்த்துரை</u>

வளமும் நலமும் நாளும் நல்கி இன்னருள் புரியும் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாக்காணும் பொலிவு சைவப் பெருமக்களுக்கு பெருமகிழ்வு தரும் அருள் நிலையாகும்.
புலம் பெயர் நாடுகளில் வளர்ந்து வரும் ஆலய அருள் சன்னிதானங்களில் முதன்மை வகிக்கும் ஆலயங்களுள் மேன்மை பெற்றுவருவது ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயம் என்பது உலகறிந்த உண்மையாகும்.

விழாக்களிலும் விரதங்களிலும் பல அடியார்கள் உபயகாரர்கள் என்று கூடி மகிழ்ந்து அம்மனின் அழகைக்கண்டு தமது துன்ப துயரங்கள் ஓடிப் போவதை உணர்ந்துள்ளனர்.பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாடிப் பரவும் ஓர் அற்புத சக்திவாய்ந்த ஆலயமாக அமைந்து அம்பிகையின் அருட் பிரவாகம் அகில உலகமெங்கும் வேரூன்றி நிற்கிறது.

இவ் இருபத்தைந்து வருட காலப் பகுதியில் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை பணியாற்றிய அல்லது பணியாற்றிக்கொண்டிருக்கும் சிவாச்சர்யப் பெருமக்கள் தங்கள் அருட்பணி ஆற்றல் மூலம் அம்பிகையின் ஆராதனைகளால் அருள் விளங்க வைத்துள்ளனர்.அதேபோல் ஆலய அறங்காவலர்கள் நிர்வாக சபையினர் ஆலய வளர்ச்சிக்கும் பொதுப்பணிகளுக்கும் அயராது உழைத்துள்ளனர்.அடியார்கள் அன்பர்கள் உபயகாரர்கள் நிதிகளையும் உதவிகளையும் அள்ளி வழங்கியுள்ளனர்.

ஒரு ஆலய வளர்ச்சி என்பது பல்வேறு நிலையில்சமூக நலன் கருதி செயற்படும் முறையில் அமைந்துள்ளது என்பதற்கு எடுத்துக் காட்டாக இவ்வாலயம் அமைந்துள்ளது.புலம்பெயர் நாடுகளில் நாம் வாழ்ந்தாலும் எமது தாய் நாட்டில் இடம் பெற்ற யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்து வாழ்வாதாரம் அற்றவர்களுக்கு ஆலயத்தின் வருமானத்தின் செலவு தவிர்நத மூன்றில் ஒரு பகுதியை தாயக மக்களுக்கு அனுப்பி வைக்கும்இவ் ஆலயத்தின் அறப் பணி பல்வேறு ஆலயங்களுக்கும் முன்னுதாரணமாக இருந்துள்ளது.

அத்துடன் கல்விநிதி கணணி என்று பல்வேறு உதவிகளை தாயகத்திற்கு இன்றுவரை செய்து வருகிற பெருமை உடையது.

அத்துடன் இவ்வாலயத்தில் பண்ணிசை வகுப்புகள் சைவ சித்தாந்த வகுப்புகள் முதலியவை மூலமாக இங்குள்ள இளம் தலைமுறையினர் ஆன்மீக நாட்டமுடன் வளர வழிவகுத்து வருகிறார்கள்.

இவர்களது இப்பணி இன்னும் பல்லாண்டு பரவி சைவமும் தமிழும் தழைத்து ஓங்க கற்பகபதி கற்பக வினாயாகப் பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி இருபத்தைந்து ஆண்டு காலப் பகுதியில் பாடுபட்ட அனைத்து சிவாச்சாரியார்கள் அறங்காவலர்கள் நிர்வகத்தினர்கள் அன்பர்கள் இளம் தொண்டர்கள் உபயகாரர்கள் அனைவரும் அம்பிகையின் அருட் பழம் பெற்றவர்களாக நீடு வாழ்ந்து நற்பணியாற்ற வாழ்த்துக்கள் கூறி வெள்ளிவிழா மேன்மையுற போற்றுகிறோம்

அருள் பொழிய வேண்டும்

ஆலய சிவாச்சாரியார்கள்
ஆலய நிர்வாகத்தினர்
அடியார்கள்




# ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)
# Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)

Unit B, Rear of 59 Station Road, Harrow, Middlesex HA1 2TY
Est. 2001 • Regd. Charity No: 1145206 • Email: sithivinayagarharrow@gmail.com • Web: harrowsithivinayagar.com
**Tel: 020 8427 5428**



**Board of Trustees**

**President:**
Mr. K. Gengatharan
Tel: 020 8863 1802

**Vice-President:**
Mr. V. Sriranjithan
Tel: 020 8429 8449

**General Secretary:**
Mr. K. Kumarathasan
Tel: 020 8424 0070

**Assistant Secretary:**
Mr. A. Sivapalan
Tel: 020 8997 5324

**Treasurer:**
Mr. T. Kiritharamohan
Tel: 020 8863 2222

Mr. M. Mohanadas
Tel: 020 3674 4859

Mr. M. Vijayakumar
Tel: 020 8481 8542

**Bankers:**

NatWest Bank plc
315 Station Road
Harrow
HA1 2AD


05-01-2017

உ

சர்வம் சக்தி

## அம்பிகையின் பெருமை

பூத்தவளே, புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே, பின் கரந்தவளே, கறைக்கண்டனுக்கு
மூத்தவளே, என்றும்மூவா முகுந்தற்கு இளையவளே,
மாத்தவளே, உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

பேரன்பு சார்ந்த அம்பிகை அடியார் பெருமக்களே,

நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் தை மாதம் 2 ம் நாள் (15-01-2017) ஞாயிற்றுக்கிழமை அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனுக்கு 25ம் ஆண்டு வெள்ளி விழா நடைபெறுவது என்பது மிகவும் சந்தோஷமான விடயம். ஏன் என்றால், பதினான்கு (14) உலகங்களுக்கும் தாயாக இருந்து அனைவரையும் காத்து அருளுகின்றவள் இந்த அன்னை.

கோபம்
வெறுப்பு
வீரம்
சிரிப்பு
மகிழ்ச்சி
இரக்கம்
பயம்
ஆச்சர்யம்
சாந்தி

எனும் நவரசங்களையும் நவசக்தியாக்கித் தன்னகத்தே கொண்டவளும் நவக்கிரக நாயகியாகி, நவராத்திரி நாயகியாகி நாளெல்லாம் நலம் தரும் அன்னை கனகதுர்க்கை அம்மன் ஆலயம் உருவாகி, அன்னை துர்க்கையின் அருள் கடாச்சத்தோடு இவ்வருடம் 25 ம் ஆண்டு வெள்ளி விழாக் காணுவதை எல்லாம் வல்ல ஹாரோ ஸ்ரீ சித்திவிநாயகர் அருளோடு, ஆலய குருமாரும், நிர்வாகசபையினரும், தொண்டர்களும், அடியார்களும் தங்கள் ஆலயமும், தங்கள் திருத்தொண்டும், சமூக சேவையும் மென்மேலும் வளரப் பிரார்த்தனையோடு வாழ்த்துகின்றோம்.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வேண்டிய வண்ணம் அருளுகின்ற அன்னை ஸ்ரீ கனக துர்க்கை அம்மனின் 25 ம் ஆண்டு வெள்ளி விழாவில் அனைவரும் தவறாது பங்கு கொண்டு அன்னையின் அருளைப் பெறுவோமாக.

இங்ஙனம்,

ஆலய குருமார்கள்,
நிர்வாக சபையினர்,
தொண்டர்கள்,
அடியார் பெருமக்கள்.

வேல்ஸ் ஸ்ரீ கல்பக விநாயகர் தேவஸ்தானம்
Wales Sri Kalpaga Vinayakar Temple
UNIT 43, ADDISON ROAD, PORT TALBOT, SA12 6HZ
TELEPHONE : 01639779872 /07870831417

## அறம் வளர்க்கும் நாயகி அன்னை கனகதுர்க்கா

மனத்துக்கண் மாசிலானாதல் அறமாகும் என்று உலகப்பொதுமறை கூறுகிறது. அத்தகைய அறத்தைப் பண்டைய காலம் தொட்டு ஆலயத்தினூடாகச் செய்துவருவது நமது சைவத்தின் மரபாகும். புலம்பெயர் தேசத்தில் உள்ள ஆலயங்கள் உணவு, உடை, உறவுகள், உறைவிடம், கல்வி என்பவற்றை இழந்து அனாதைகளாகவிருக்கும் உயிர்களுக்கு ஸ்ரீ கனகதுர்க்கை அறக்கட்டளை மூலமாக நல்ல சத்துணவும் நல்ல கலாச்சாரச் சீருடையும் நல்லகல்வியும் அன்புஇல்லங்கள் மூலம் நல்கி அறவான்களாக ஆக்கிப் பல இளம் சமுதாயத்தையும் முதியோரையும் அன்புக் கரம் நீட்டி வளர்த்தெடுக்கின்றது. ஆலயக்கிரியை, ஆலய வழிபாடு, தமிழ்க்கலை கலாச்சார வகுப்புகள் நிகழ்ச்சிகள் மூலமாக சித்தமலம் அறுவித்து அதாவது மனத்தின்கண் இருக்கின்ற மாசுகளை அகற்றும் மாபெரும் பணியாகிய அறப்பணியைப் புலம்பெயர் தேசங்களில் ஆலயத்தினூடாகச் செவ்வனே ஆற்றிவரும் ஆலயங்களில் முதன்மையாக இருப்பது அன்னையின் ஆலயமே.

உ
Love is God
# LONDON SIVAN KOVIL TRUST
இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Dr. S.Rajasundaram

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharajah

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Sivathasan

**Community Service. Sub Committee Chairman**
Mr. T. Arulthas

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S.Yogarajah

K V. Kanesamoorthy
Dr.(Mrs.) V.M.Karunakaran
Mr. S.Parameswaran
Dr. S.Navaratnam
Mr. N. Sivasubramaniam
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

**7th January 2017**

I am deeply humbled and blessed to provide this message on behalf of London Sivan Kovil Trust, as we approach the 25th Anniversary celebration of the Shri Kanagathurrkai Amman Temple which is to be held on 15th January 2017. Over twenty five years since the initiation ceremony of the Shri Kanagathurrkai Amman Temple, we as a community of Amman devotees continue to benefit immeasurably from the divine space where we can all pray to the tangible presence of our beloved Shri Kanagathurrkai Amman in West London.


The Shri Kanagathurrkai Amman Temple has had a profound impact on the growth and practice of Saivism and Hinduism in West London and provided a much needed platform upon which to cultivate spiritual and cultural values. Whilst addressing the core need of the Saiva and Hindu community at large, the temple has been particularly supportive in providing our youth various opportunities to learn Tamil Language, South Indian classical music and dance over the last twenty five years.

The Shri Kanagathurrkai Amman Temple has supported numerous charitable activities in Sri-Lanka and elsewhere throughout the last twenty five years. The temple also founded and supported many cultural projects throughout North and East Sri-Lanka. The Temple is continuing the charitable services and activities tirelessly which is very much welcomed by many in Sri-Lanka, UK and around the world. It was only made possible by the grace of our Goddess Shri Kanagathurrkai Amman.

At this historic moment, the Priests, Saiva Kurukkal, Othuvar, Trustees, Temple staff and devotees associated with the London Sivan Kovil collectively pray that Lord Arunachaleshwarar and Goddess Abeethakujambal shower their blessings upon this auspicious occasion.

.

With Regards,



**Dr T Sriskandarajah**
President of London Sivan Kovil Trust.

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Education for Language, Music & Culture - Funeral Religious Services.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
## Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu )Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com   email: smsukinfo@gmail.com


1977 2017
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
நாளைய கனவை நனவாக்கும் நாற்பது
The best preparation for tomorrow is doing our best today


*40th Year Management Committee*

*Vice- Patrons*
Dr (Mrs) Indra Siva-yoham
Dr V Balasegaram
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hony. General Secretary & Trustee*
Mr M Indusegaran

*Hony. Treasurer & Trustee*
Mr S Niranjan

*Hony. Deputy Gen. Secretary & Trustee*
Mr S Balasingam

*Trustees*
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai
Mr S Thamboo

*Building Project Secretary*
Mr G Paramesvaran

*Examination Secretary*
Mr V Jegendirabose

*Membership Secretary*
Mr S Ratnarajah

*Overseas Project Secretary*
Mr V C Vamananananthan

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Religious Secretary*
Mr S Kugarajah

*School Secretary*
Mrs S Aatheesan

*Social Service Secretary*
Mrs B Kanagasabesan

*Assistant Treasurer*
Mrs G Sooriyakumar

*Committee Members*
Mrs S Chandrakobal
Mrs A Gunarasa
Mrs V Kanagenthiran
Mr V R Loganathan
Mrs V Mahadevan
Mr M Ravindradas
Mrs P Sabaratnam


05.01.2017

ஸ்ரீ கனகதுர்கை அம்மன் ஆலய சிவாசாரியார்கள், நிர்வாகத்தினர், தொண்டர்கள் அனைவருக்கும் வணக்கம்.

காஞ்சியில் ஸ்ரீகாமாட்சித் தாயார் அறம் வளர்த்தார் என்பது புராணத்தில் வரும் செய்தி. இதைப் படித்ததுண்டு. அந்தக் கருணை மிக்க அன்னையின் அன்பையும், அரசாட்சியையும் நினைக்கும் போது மனம் ஆனந்தமடைகிறது.

இந்நாட்டில் இருபத்து ஐந்து ஆண்டுகளாக ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் அறம் வளர்த்து வருகின்ற அதிசயத்தைக் கண்முன் பார்க்கின்ற போது நாம் பரவசப்படாமல் இருக்க முடியாது.

ஆலயம் என்பது ஓர் அறச்சாலை என்பது உங்களால் நிரூபிக்கப்பட்ட உண்மை. ஆலயம் ஒரு கலைக்கூடம் என்பதையும் அங்கு நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் நூல் வெளியீடுகள், சமயத் - தமிழ் வகுப்புகள் போன்றவை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

இப்படிச் சீரும் சிறப்புமாக சைவப் பணி செய்து வளர்ந்துள்ள உங்களைப் பாராட்ட வார்த்தைகள் போதாது. இப்பணி இன்னும் பல்லாண்டுகள் தொடரவும் பன்மடங்கு வளரவும் நாம் அனைவரும் இறைவனை வணங்கி வாழ்த்துகிறோம்.

இந்தப் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களையும், நீரூற்றி வளர்த்தவர்கள், பாடுபடும் தொண்டர்கள், அவர்களின் குடும்பத்தினர் அனைவரையும் இவ்வேளையில் நாம் நினைந்து பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

இப்படிக்கு

அன்புடன்

ச ஆனந்தியாகர்

சதாசிவம் ஆனந்ததியாகர்




உ

ஸ்ரீ நாகபூஷணி துணை

*'ஆகமப்பிரவீணா' 'ஆசீர்வாதஸரபம்' 'பிரதிஷ்டாதிலகம்'*

*'சிவாச்சார்யகலாநிதி'* **சிவஸ்ரீ. ஐ.கைலாஸநாத வாமதேவக் குருக்கள்**

**நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு**

**கைலாஸநாத வேத சிவாகம பாடசாலை - கோண்டாவில்**

+94 77 995 4779<br>+94 77 980 4909 | 1ம் வட்டாரம்<br>நயினாதீவு | 376/79 இருபாலை வீதி.<br>கோண்டாவில் கிழக்கு




மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கும்வகை செய்வோம் என்பதற்கமைய புலம்பெயர்ந்து வாழ் மக்களின் பெரும் உழைப்பில் லண்டன் மாநகரில் சிறந்த ஒரு ஆலயத்தை அமைத்து சைவ சமயத்தையும் தமிழினையும் வளர்த்து வரும் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் இன்று தனது 25ம் ஆண்டு வெள்ளி விழாவை நடாத்தி மகிழ்கின்றது.

இவ்வாலயம் லண்டன் வாழ் தமிழ்மக்களின் குறிப்பாக தமிழ் இளைஞர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு பல சிறந்த தமிழ், சமய, சமூக சேவைகளை செய்து வருவதுடன் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவிதமான உதவிகளைச் செய்துவருவதும் பாராட்டத்தக்கது. அன்னையின் அருளால் ஆலயத்தின் சேவைகள் மென்மேலும் சிறப்புற வாழ்துகின்றேன்.

கடந்த 25 வருட காலமாக ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சியில் அயராது உழைத்த நிர்வாக உறுப்பினர்கள், சிவாச்சார்ய பெருமக்கள், கலைஞர்கள், உபயகாரர்கள், ஆலயத் தொண்டர்கள், அடியார்கள் அனைவருக்கும் அன்னை நயினை நாகபூஷணி அம்மனின் திருவருள்த்துணைகொண்டு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

...:: வாழ்க பல்லாண்டு வளர்க தம் இறைபணி ::...

ஐ.கை.வாமதேவக் குருக்கள்



## ஓம் சக்தி

## மனத்துயர் நீக்கும் அன்னை ஸ்ரீ கனக துர்க்கா

மனத்துயர் நீக்கி அருள் ஆட்சி ஈலிங் பதியில் நடாத்திக் கொண்டு அருள்மிகு அன்னையாக ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளின் அருள் ஆட்சியின் 25 வருட நிறை நாளில் அம்மனின் அருள் கடாட்ஷங்களை எவராலும் நினைவு கூராமல் இருக்கமுடியாது. அந்த வகையிலே ஆண்டாண்டு காலமாக இலண்டன் வாழ் அடியார்கள் அனைவரையும், காத்தருளும் சக்தியாக வேண்டுபவன யாவும் வேண்டி வரமருளும் அன்னை ஸ்ரீ கனக துர்க்காவாகும். அன்னை துர்க்காவை உள்ளன்புடன் வழிபட்டால் நம் வாழ்வில் அளவிடா நன்மைகள் விளையும். வாழ்வில் ஏற்படுகின்ற துன்பங்கள், துயர்கள், குரோத, விரோத துன்பம் என்பவற்றை அகற்றிக் காத்தருள் விழையும் அன்னை துர்க்காவாகும், எனவே அன்னையைப் போற்றி வணங்கி நித்ய நைமித்ய பூஜை வழிபாடுகள், அபிஷேக ஆராதனைகள், அலங்காரங்கள், திருவிழாக்கள் பக்தி பஜனைகள் நடத்தி மேன்மேலும் பல நூற்றாண்டுகள் அன்னை அருள் பெற்று உய்வோமாக.

அன்னையைச் சரண் அடைந்து அதிகவரம் பெற்று உயர்வோம்.

முன்னைநாள் குரு

**சிவஸ்ரீகணேச ஷண்முகதாஸக்குருக்கள்**



## Silver Jubilee SKTAT

I have always fondly been called the temple child and I have come to realise how fortunate I am to have this identity. I spent the first few years of my life. Living in the temple and took my first few steps in Ambal's grace. Since those days, I have accumulated a strong bond not only with Shri Kanaga Thurkai Amman but also with the temple community as a whole. To be part of this community and to work with them is a great blessing. Furthermore to have with eased, the development of the temple has been extremely satisfying. SKTAT has helped many people in Srilanka by raising money via donations from the devotees. In addition our temple has hosted many religious and cultural events which have most desiniely played a vital role in tying our community closer together. One final Achievement of our temple, out of the long list is the fact that it has undergone 2 maha kumbabishekhams, which have added to the divinity and purity dot the temple, The contributions our temple has made to our lives, I'm sure we can all agree is truly ineffable and the mere thought that our temple has reached its 25th Anniversary, is a standing and will-surely be the first at many milestones to come.

**Bhrmasi Shakishnan Sharma**

# ஆலய அறங்காவலர் சபை



திரு. இ. கணேசராசா, திரு. S. பிரேமச்சந்திரா திரு. ச. அபயலிங்கம், திரு. S. ஸ்ரீரங்கன், திரு. T. தேவராஜன், கலாநிதி. திரு. A. தேவசகாயம்

வைத்திய கலாநிதி திரு. V. பரதநாதன்

# ஆலய நிர்வாக சபை (2015 - 2017)



திரு. S. இரகுநாதன். திருமதி. S. கணேசராஜா, திரு. K. சர்வானந்தன், திரு. R.D. இரத்தினசிங்கம், திரு. க. கேசவன், திருமதி. சா. சுந்திரலிங்கம், திரு. P. கணபதிப்பிள்ளை

## ஆலய நிர்வாக சபைத் தலைவர்கள்



திரு. N. கிருஷ்ணராஜா, திரு. தா. யோகநாதன், திரு. R.D. இரத்தினசிங்கம், திரு. E.S. பாலசிங்கம், திரு. செ. இராமசந்திரன், திரு. சொ. கருணைலிங்கம்

ஆலய வெள்ளி விழா குழு






புதிய பொலிவுடன் இனிதே உங்கள் இல்லம் நோக்கி வருகிறது

## ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி

**24 மணிநேரமும் கீழ்கண்ட தளங்களில் அம்மனை தரிசித்து மகிழுங்கள்...**

**www.ammanealing.org என்ற இணையத்திலும்,**

**சாலை டிவி மற்றும் Smart Phone, Ipad, Tablet**

மேலதிக விபரங்களுக்கு :

**5 Chapel Road, London W13 9AE**
**email:** info@ammanealing.org, **Phone:** 0044 - 208 810 0835
Charity No: 1014409

# Anish Eagle Cargo (Pvt) Ltd

Export & Import

## Door to Door

**Parcel & Courier Service.**

**within 5 Days to Colombo**



- No Hidden Charges
- On Time Delivery with Special Care
- Free Delivery Throughout the country
- Collections made all over UK.

இலங்கை, இந்தியா மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் பொருட்களை பக்குவமாகவும் பாதுகாப்பாகவும் இல்லம் வரை கொண்டு சென்று கையளிக்கும் சேவை!

- எவ்வித மறைமுக விலைகளும் இல்லை
- பாதுகாப்பாகவும் இல்லம் வரை சென்று கையளிக்கும் சேவை!
- இலவசமாக இலங்கை முழுவதும் செய்துதரப்படும்
- பிரித்தானியாவின் எப்பகுதியிலிருந்தும் சேகரிப்பு







### SPECIAL OFFERS ON AIR CARGO

Very Good Price for whole Container and Part Container
Quantity Goods will get Special Discounts
We can Bring parcels from Srilanka to UK at a reasonable price.
We can Bring any special things for your special occasions.

**55A Watling Avenue, Burnt Oak, Edgware HA8 0LD**

**Tel: 020 3605 2949**


0203 605 2949 / 0208 9308 211 / 0775 794 5359 / 0771 001 0293

email: anishexportandimport@yahoo.com
Web: anisheaglecargo.com

Anish Eagle Cargo Pvt. Ltd.



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Srilankan Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5, Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporim Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)


Accounting
And
Allied Services
• Personal Tax
• Corporation Tax
• Value Added Tax
• Capital Tax
• Business Advice
Contact : Ravi
T: 020 8572 6447 ext 4, Mob: 078 5992 2679
email: accountingallied@btconnect.com
52A Spring Srove Road, Hounslow, Middlesex TW3 4BN
Under the parent Company Tamsons add Accounting and allied services ltd

# CARLTON LEISURE
Worldwide Travel & Tours

இலங்கை, இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விமானப்பயணச்சீட்டு விற்பனையில் கடந்த 22 வருடங்களாக தனக்கென முத்திரை பதித்த ஒரே ஒரு தமிழ் முகவர் நிறுவனமான **Carlton Leisure** வாடிக்கையாளரின் நம்பிக்கையின் உச்சத்தில் தன்னம்பிக்கையுடன் தமது சேவைகளை தொடர்கிறது...

## Why book with Carlton Leisure?

- Price match guarantee
- Exclusive deals for hundreds of destinations
- All your travel needs under one roof
- ATOL protected
- Fly now and pay later
- Trusted household brand
- Fast and reliable service

FLY THE WORLD FOR LESS

Great

Based on 1,061 reviews
See some of the reviews here.
TRUSTPILOT

## Worldwide Holidays



Presenting the most beautiful places of the world
**020 8429 2797**
**tours@carltonleisure.com**

Book now at
**www.carltonleisure.com**

Call us on
**020 8100 0000**

நியாயமான விலையில் விமானப்பயணச்சீட்டு விற்பதில் கீழ்வரும் விமான நிறுவனங்களிடம் நியமனம் பெற்ற ஒரே ஒரு தமிழ் முகவர்

**HARROW** 299 RAVNERS LANE HARROW, MIDDX, HA5 5EG
020 8426 1266

**EAST HAM** 5 STATION PARADE EAST HAM, LONDON, E6 1JD
020 8552 6125

**ILFORD** 742 EASTERN AVENUE ILFORD, ESSEX, IG2 7HU
020 8554 4200

**TOOTING** 1081 GARRATT LANE TOOTING, LONDON, SW17 0LN
020 8672 5757

# "உன்னடியார்தாள் பணிவோம்!"

– ச. சிறீரங்கன்

(தலைவர், அறங்காவலர் சபை)



இருபத்தைந்து வருடங்கள் என்பது வரலாற்றுப்பதிவுகள் அடங்கிய ஓர் கலைக்களஞ்சியமாகும். 1991ல் முகிழ்த்த எங்கள் ஆலயம், இன்று உலக மக்கள் வியக்கும் பேசு பொருளாக மாறியுள்ளது. இதற்குக் காரணமாயுள்ள மெய்யடியார்களுக்கு, அடியேனின் இரத்தத்துடன் கலந்து, ஒன்றிவிட்ட தலை சாய்ந்த வணக்கத்தையும், அன்புணர்வையும் தெரிவிக்கின்றேன். கூடவே, "உன்னடியார்தாள் பணிவோம்" என்ற மணிவாசகப்பெருந்தகையின் வாக்குப்படி, அடியார்களின் பாதாரவிந்தங்களுக்கும் கைகூப்புகின்றேன்.

அடியார்கள், நிர்வாக சபையினர், அறங்காவலர்கள் என்ற முக்கோணக்கட்டமைப்பில், எமது ஆலயம் பரந்துள்ளது. "மக்களால், மக்களுக்காக" என்ற ஜனநாயகக் கோட்பாட்டை உள்வாங்கிய அறங்காவற் சபையினராகிய நாங்கள் அன்றாட நிர்வாகத்தை, பொதுமக்களிடமே ஒப்படைத்துள்ளோம். இது எங்களுக்கும் பெருமை தருகின்றது. 25 வருடங்களின் வரலாற்றுப்பதிவுகளின் பக்கங்களைத்தட்டிப் பார்க்கின்றபோது. 91-95 காலப்பதிவில், நடமாடும் ஆலயமாக கரோ, வெம்பிளி, சவுத்தோல் இடங்களுக்கு அறங்காவலர்களும், அடியவர்களும் எடுத்துச்சென்றமை முதற்கட்டமாகின்றது. 95ம் ஆண்டு நிரந்தமான, தற்போதைய ஆலயக்கட்டிடத்தை வாங்குவதற்காக, நாற்புறமும் சென்று, அடியார்கள் பெருவாரியான பணத்தை, மிகச்குறுகிய காலத்தில் வாரிக்குவித்தமை இரண்டாம் கட்டமாகின்றது.

எமது தாயகமாகிய இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்கள் இன்றும் அருள் தருகின்றன. கனக துர்க்கை அம்பாளின் ஆலயக்கட்டிடத்தை வாங்குவதற்காகப் பாடுபட்ட மக்கள் அனைவரும் மன்னர்களாகவே மாறிவிட்டனர். சோதனைக்குள்ளாகியவர், சாதனை படைப்பர் என்ற வாரியார்சாமிகளின் வாக்குப்படி, அடியார்கள் அனைவருமே சோதனைக்குட்பட்டு, சாதனைபடைத்திருக்கின்றோம்! கனக துர்க்கையின் கடைக்கண் பார்வையில் தாயக மக்களின் நல்வாழ்வுக்கு ஆலயம் செய்ததும், செய்துவரும் பணிகளும் மிக அளப்பரியன.

"கருவும், உருவும் என்ற தலைப்பில், அறங்காவலர்கள் இணைந்து, முதலாவது கும்பாபிசேகமலரில், ஆலயத்தோற்றம் பற்றிக்கட்டுரை எழுதியுள்ளோம். இறையோடு சங்கமமாகிவிட்ட அமரர்கள் பொன். தெய்வேந்திரம், இராமச்சந்திரன் ஆகிய அறங்காவலர்கள் இருவருக்கும் அஞ்சலி செலுத்துகிறேன்.

"வேத மந்திர சொருபா நமோநம" என்று அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய இறை சொருபங்களுக்கு நாள்தோறும் மந்திர சக்தியால் வலுவேற்றும் சிவாச்சாரியர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

# அவள் அருளால் அவள் தாள் வணங்கி

**இ.து. இரத்தினசிங்கம்**

தலைவர், நிர்வாகசபை



இன்று நாம் எமது ஆலயத்தில் வெள்ளிவிழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த வெள்ளி விழா யாருக்கு? எதற்காகக் கொண்டாடுகின்றோம் என்று பலர் சில கேள்விகளை எழுப்பினார்கள். எமது ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளுக்கு ஆதியும் அந்தமும் இல்லை என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அப்படியாயின் யாருக்கு இந்த வெள்ளி விழா? இந்த வெள்ளி விழா என்பது மேற்கு இலண்டனில் வாழும் இந்துக்களாகிய நாம் எமது ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளை வழிபட ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்கள் ஆகின்றது என்பதையிட்டே நாம் இந்த வெள்ளிவிழாவை அம்பாளுக்கு நன்றிக் கடனாகக் கொண்டாடுகின்றோம்.

நாம் எல்லோரும் அம்பாளை வணங்கி பல வரங்களை கேட்டிருப்பினும் எமக்கு எது உகந்தது என்பதை அவளே உணர்ந்து எமது ஈடேற்றத்திற்கு நன்மை பயக்கும் வரங்களை அவளே வழங்கி எம்மை வாழவைப்பதற்கு நாம் என்றும் அவளுக்குக் கடப்பாடு உடையவர்களாக உள்ளோம்.

ஒருசமயம் பாண்டவர்களிடம் கிருஷ்ணபரமாத்மா விஜயம் செய்தபோது அவர் பாண்டவர்களிடம் விரும்பிய வரங்களைக் கேட்குமாறு கூறினார். சகாதேவனைத் தவிர ஏனைய நால்வரும் ஒவ்வொரு வரத்தைக் கேட்டனர். கிருஷ்ணபரமாத்மா சகாதேவனிடம் நீ ஏன் ஒன்றும் கேட்கவில்லை என்று வினாவினார் அதற்கு சகாதேவன் எல்லாம் அறிந்த உணர்ந்த உங்களுக்கு எனக்கு என்ன உகந்தது என்பது தெரியாதா என்பதால் நான் உங்களிடம் வரம் கேட்பது உங்களை அவமதிப்பதாகாதா? என்று கூறியபொழுது மற்ற நால்வரும் வெட்கித் தலை குனிய கிருஷ்ணபரமாத்மா சகாதேவனின் பக்தியையும் அவன் தன்மேல்கொண்டுள்ள நம்பிக்கையையும் பாராட்டினார். அது போலவே தான் எம் அம்பாளும் எம் ஒவ்வொருவருக்கும் எவை உகந்தது என்பதை அவளாகவே எமக்கு வழங்கி எம்மை வாழ வைப்பதற்கு நன்றியாகவே நாம் இந்த வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றோம்.

மேற்கு இலண்டனில் வசித்த ஒன்பது அடியார்கள் ஒன்று கூடி அம்பாளுக்கு ஓர் ஆலயத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் "ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறக் கட்டளை" என்ற ஓர் அறக்கட்டளையை உருவாக்கி மூன்று படங்களுடன் 10.08.1991 ல் வழி பாட்டைத் தொடக்கி வைத்தார்கள். அந்த ஒன்பது ஸ்தாபக அறங்காவலர்களுக்கும் நாம் என்றும் நன்றி உடையவர்களாக உள்ளோம். அந்த ஒன்பது அறங்காவலரில் ஒருவர் விலகிக் கொள்ள பொது மக்களால் இன்னுமொருவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்று படங்களுடன் நடமாடும் ஆலயமாக சவுத்கோல் சக்கிள்டன் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை களிலும் வெம்பிளி லிற்றில் ஹோல் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமைகளிலும் அடியார்களாகிய நாம் எல்லோரும் அம்பாளை வழிபட்டு வந்தோம்.

அம்பாளின் கருணையினால் நடமாடும் ஆலயமாக செயல்பட்ட ஆலயத்தை இந்த நிரந்தரமான ஆலயமாக வழிபடுவதற்கு ஏதுவாக பொதுமக்களின் பணத்தினால் இந்த இடத்தை (முன்பு தேவாலயமாக இருந்தது ) கொள்வனவு செய்து புனருத்தாரணம் செய்து பொதுமக்கள் எல்லோரும் வழிபடும் வண்ணம் 1999ம் ஆண்டு ஆனிமாதம் 6ம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டுப் பொது

மக்கள் எல்லோரும் வழிபடுவதற்கு ஏதுவாய் அமைந்தது. இந்த ஆலயம் பொது மக்களுக்காகப் பொது மக்களின் பணத்தினால் இன்று இந்த நிலையில் மிளிர்கின்றது.

கனகம் என்ற சொல்லுக்கு ஒப்பாக எமது அம்பாளுக்கு அடியவர்களின் காணிக்கையும் அன்று தொட்டுக் குவிந்தவண்ணமே உள்ளது. அம்பாள் எம் ஒவ்வொருவருக்கும் அளிக்கும் நல்வாழ்விற்கும் செல்வத்திற்கும் அமைவாக எமது அடியவர்களும் தமது காணிக்கையை வாரி வழங்கிக் கொண்டே உள்ளார்கள்.

நான் முன்பு குறிப்பிட்டது போல அம்பாளுக்கு எமது மக்களுக்கு காலத்துக்கு காலம் தேவைகளுக்கு ஏற்ப என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்தவளாக எமது ஆலயத்தின் மூலமாக நமது தாய் நாட்டில் உள்ள உதவி தேவைப்படுகின்ற உடன்பிறப்புகளுக்கு நிவாரணம் அளிக்கும் வண்ணம் எமது ஆலய யாப்பிலேயும் ஆலயத்துக்கான காணிக்கையில் செலவுகள் தவிர்ந்த மிகுதியில் மூன்றில ஒரு பங்கு தாய் நாட்டில் அவதியுறும் மக்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவள் இன்றி ஒரு அணுவும் அசையாது என்பதற்கமைய எக்காலத்திற்கு என்ன நடைபெற வேண்டும் என்பதை அவளே தீர்மானித்து அடியவர்களைக் கொண்டு அவள் செயல்படுத்துவாள் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும்.

எமது ஆலயம் பல அறப்பணிகளை நமது தாய்நாட்டில் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கின்றது. அம்பாளின் கருவியாகவே அடியவர்களாகிய நாம் செயற்பட்டு வருகின்றோம். எமது அறப்பணிகளின் விபரங்களை அடியவர்களாகிய எல்லோரும் அறிவீர்கள். நான் அவற்றை இங்கு பட்டியல் இட்டுக் காட்டத் தேவையில்லை.

ஆகவே நாம் மாணிக்கவாசகர் கூறியபடி அவன் அருளால் தான் அவனை வணங்கமுடியும் என்பதைப் போல் எமது அம்பாளின் அருளால் தான் அவளை நாம் வணங்கி சேவிக்க முடிகின்றது என்பதை மனதில் நிறுத்தி அவள் எம்மை ஈடேற்றுவாள் என்ற நம்பிக்கையுடன் வழிபடுவோமாக.

இந்த வெள்ளி விழாவிற்கான சகல ஏற்பாடுகளிலும் முதன்மையாக நின்று பெரும் பொறுப்பை எடுத்து செயலாற்றிய எமது நிர்வாகசபைச் செயலாளர் தம்பி கேசவன் அவர்களை நான் இங்கு குறிப்பிட்டு அவருக்கு நன்றி கூறாமல் விட்டால் நான் என் கடமையில் இருந்து தவறியவன் ஆவேன்.

மேலும் எமது ஆலய முகாமையாளராகச் செயலாற்றும் திரு.சச்சிதானந்தனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

நன்றி

உ

சிவமயம்

# இணை ஸ்தாபகரின் இதயத்திலிருந்து ஆலயத்தின் ஆரம்பம் முதல் வெள்ளி விழா வரை இனிய நினைவுகள்



தனந்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும், தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும், நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும், பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

சொர்ணபூமியாக விளங்கும் லண்டன் மாநகரின் ஈலிங் பகுதியில் ஐரோப்பிய சக்தி பீடமாக விளங்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தைத் தோற்றுவிக்க எமக்கு ஆலோசனை வழங்கியவர் லண்டன் உயர் வாசற்குன்று முருகன் ஆலயத்தில் கடமையாற்றியவரும் நாயன்மார்கட்டு சிவபதமடைந்த சிவஸ்ரீ சாம்சிவ சண்முகநாத குருக்கள்.

குருக்கள் இளம் பராய பாடசாலை நண்பராகிய அப்பையா தேவசகாயம் ஆகிய என்னையும் அமரர் பொன். தெய்வேந்திரம் அவர்களையும் ஒன்றிணைத்தார். அதன்பின் இருவரும் பலதடவை ஒருங்கிணைந்து அடியேன் ஐவரையும் அமரர் பொன். தெய்வேந்திரம் இருவரையும் சேர்த்து ஒன்பது பேர்கொண்ட அறங்காவலர் சபையை அமைத்து 10-08-1991ம் ஆண்டு சென்னை காளிகாம்பாள் ஆலய பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ டாக்டர் சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையில் கறோ (Harrow) கனிபேன் (Honeyburn) மண்டபத்தில் திருவுருவப்படங்களில் திருவிளக்குப் பூசையுடன் ஆரம்பித்தோம்.

ஆரம்பகாலத்தில் மோட்டர் காரில் நடமாடும் தெய்வமாக விளங்கிய அன்னையின் அருளாட்சி முதலாவது விஜயதசமி விழாவை சவுத்தால் நகரில் 1991 இல் கோலாகலமாகக் கொண்டாடிப் பல பக்தர்களின் மனதில் இடம்பிடித்தாள், இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சவுத்தோல் - சக்கிள்ரன் மண்டபத்தில் அபிஷேக ஆராதனையும், 11-08.1992 இல் வெம்பிளி நியூ ஹோல் மண்டபத்தில் மங்களவாரப் பூசையும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அடியார்களுக்கு பாவவினைகள் தீர்த்து. அற்புதங்கள் புரிந்து அன்னபூரணியாகவும் திருவுருவப் படத்திலிருந்து 29.01.1993 எழுந்தருளியாக காட்சியளித்தாள்.

இதனைத் தொடர்ந்து ஆலய சட்டயாப்புக்கமைய அறங்காவலர் சபையினர் புதிய நிர்வாகசபையை 1993 ஆம் ஆண்டு தமிழ் புதுவருடத்தினத்தன்று தெரிவு செய்து பக்த அடியார்களின் கருணையாலும், நன்கொடையினாலும், அயராத உழைப்பினாலும், அம்பிகையின் நிரந்தர ஆலயம் மூன்று வாரங்களில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பவுண்களை பொதுமக்களிடம் காணிக்கையாகப் பெற்று 09-06-95 இல் கொள்வனவு செய்த பொன்னாள் கொள்வனவு செய்த ஆலயத்தில் நடமாடும் தெய்வமான அகிலாண்டேஸ்வரி 7.7.95இல் குடிபுகுந்தாள். நிரந்தரமாக குடிகொண்ட அன்னை கொள்வனவு செய்யப்பட்ட மெதடிஸ் தேவாலயத்தை இந்து ஆகம விதிப்படி புனருத்தாரணம் செய்ய இந்தியச் சிற்பாசிரியர்கள் 1997 இல் வரவழைக்கப்பட்டார்கள். அருள் நிறைந்த, அற்புதம்மிக்க ஆலயம், ஸ்ரீகனக என்ற சொல்லுக்கமைய பொன்முலாம் பூசிய அழகிய கோபுரத்துடன் ஆறு அடி உயரமுள்ள ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இடது கையில் சூலத்துடன் மூலவராகி, பரிவார மூர்த்திகளாக

ஸ்ரீ வரசித்தி விநாயகர், மீனாட்சி சுந்தரர், சத்தியலெட்சுமி சமேத ஸ்ரீ சத்திய நாரயணன், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், நவக்கிரக நாயகர்கள், ஞான வைரவர், சுவாமி ஐயப்பன், ராதா கிருஷ்ணன், நடராஜா சிவகாமசுந்தரி, ஸ்ரீ சக்கரம், சந்திரசேகரர் உமையாள், ஆஞ்சநேயர் ஸ்ரீ தாரிகா சாண்டிகேஸ்வரி ஆகிய தெய்வ வடிவங்களும், ஆலய அமைப்பும், பக்தர்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கின்றது.

இவ்வரிய ஆலயத்தின் திருக்குடமுழுக்கு விழா 6.6.1999இல் இலங்கையில் இருந்து வருகை தந்த சிறப்புமிக்க சிவாச்சாரியார்களும், இலண்டன் வாழ் சிவாச்சாரியார்களாலும் முத்தமிழ் குருமாமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்களின் தலைமையில் கண்களிலும், மனதிலும் பக்தி சிரத்தையோடும் தேவலோகக் காட்சிபோல் இன்றும் பூத்தவண்ணம் இருக்கின்றது. இவ்வைபவம் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்னும் சான்றோர் வாக்கிற்கிணங்க ஆலயத்துக்கு மென்மேலும் சிறப்பு ஓங்கி இன்று ஐரோப்பாக் கண்டத்தின் முதன்மை பெற்ற அருள்மிகு சக்திபீடமாக விளங்குவின்றது.

ஐரோப்பாக் கண்டத்தின் முதன்மை பெற்ற சக்திபீடமாக விளங்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மனுக்கு சங்காபிஷேகங்கள், திருவிளக்கு பூசைகள், பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, பிரதோஷ விரதம், தமிழ்மாதப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை, ஸ்கந்த சஷ்டி தினங்களில் விசேட பூசைகளும், வாகனங்களில் சுவாமி வீதி உலா வருவதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்புமிக்க விழாவாக கும்பாபிஷேக தினததையொட்டி இணுவில் குருகுல ஆச்சாரியார் சிவஸ்ரீ மகாதேவக்குருக்களின் தலைமையில் "இலட்ச அர்ச்சனை" ஆறு நாட்கள் நடந்தது.

2000 ஆம ஆண்டு அலங்கார உற்சவமாக நடைபெற்ற திருவிழா இவ்வாண்டு மகோற்சவ விஞ்ஞாபனமாக நடைபெறக் திருவருள் பாலித்து ஈழத்திருநாட்டில் இருந்து கொடித்தம்பம் வரவழைக்கப் பட்டு சிறப்புற நிர்மாணித்து, அழகுற அமைந்த யாகசாலையுடன் பக்தப் பெருங்கோடிகள் அரோகரா கோஷம் எழுப்ப கொடியேற்றுவிழா சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து இருபத்தைந்து திருவிழாவும் அம்பிகையை 25 விதமான அம்சங்களில் சிம்மவாகனத்தில் அலங்கரித்து சிவாச்சாரியார்கள் தங்கள் கைவண்ணத்தை காட்டியது கேட்டறிந்த இந்திரலோகத்தைப் பக்தர்களுக்கு சிவாச்சாரியார்கள் பூவுலகில் காட்டி ஆனந்தமடைய வைத்தனர்.

இவற்றையெல்லாம் விட அற்புதமாக அன்னைக்கு "அழகான சித்திரத்தேர்" அமைக்கும் திட்டத்தை கொடியேற்றத் திருவிழா அன்று அங்குரார்ப்பணம் செய்து பத்தாம் திருவிழாவின் அன்று முதற் கட்டவேலைகளை ஆரம்பித்து பதினான்கு நாட்களுக்குள் அழகான சித்திரத்தேரின் முதற்கட்ட வேலைகள் பூர்த்தியடைந்து வெள்ளோட்டமும் நடைபெற்று, தேர்த்திருவிழா சிறப்புற அமைய இரவு பகலாகத் தனது குழுவுடன் அயராது உழைத்தவர் ஈழத்தின் திருநெல்வேலியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் விஸ்வகர்ம சிரோன்மணி" இரத ஸ்தபதி" திரு. சுரேந்திரன் என்னும் இந்திரன்.

இத்தேர்த்திருவிழா ஈழத்திருநாட்டில் நடைபெறுவதை மக்களின் மனக்கண்முன் நிறுத்தி நான்கு வீதிகளிலும், மேளதாள நாதஸ்வர மங்கள வாத்தியங்கள், நடனங்கள், குடைகள், ஆலவட்டங்கள், பஜனைக்கோஷ்டிகள் பக்தர்கள் புடைசூழத் திருக்காட்சியளித்துப் பக்தப் பெருமக்களுக்கு பேரானந்த சொரூபியாக வரங்களை வழங்கினாள். மெய்மறந்த பக்தர்கள் பூரிப்படைந்தனர்.

எங்கள் ஆலயம் ஆன்மிக வளர்ச்சியுடன் நின்றுவிடாமல் தர்மகாரியங்களிலும், கலை, கலாச்சாரம், தமிழ், சமய வளர்ப்பு முறைகளையும் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கின்றது.

இவ் ஆலயத்திற்கு ஈழத்தில் இருந்து சிவாச்சாரியார்கள் சேவை செய்ய இரண்டு வருடங்களுக்கு மூவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. இதனை விட ஈழத்திருநாட்டின் கல்விமான்கள், சான்றோர்கள், கதாப்பிரசங்க வித்துவான்கள் வருடாவருடம் திருவிழாவையொட்டி அழைக்கப் படுகின்றனர். உயிர்கள் அனைத்தையும் காக்கும் ஆதிபராசக்தியாக" ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்" ஈழத்திருநாட்டில் அல்லலுறும் குழந்தைகட்கும், பக்தர்களுக்கும் தாயாகி ஆலயத்தின் வருமானத்தின் பெரும்பகுதியை தர்மஸ்தாபனங்களுக்கும் குழந்தை பராமரிப்பு நிலையங்களும் புனர்வாழ்வு நிலையங்களுக்கும், மாதந்தோறும் அனுப்பி அன்புக்கரங்களினால் அணைத்து அருள்புரிகின்றாள். ஆலயத்தின் பெயரில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளோம். இக்காலகட்டத்தில் அம்பிகையின் தேர் அர்ச்சனைப்பணத்தின் வருமானத்தை அன்னபூரணியாகி அல்லறும் மக்களிற்கு பசி தீர்க்க வழிவகுத்து ஆனந்தமடைந்தாள்.

மேலும் சமுதாய மேம்பாட்டிற்காக வடக்கு, கிழக்கு மலையக பிரதேசங்களில் கலை மகளாகிக் கணனி நிலையங்களையும் திறந்தாள். இத்துடன் நின்றுவிடாமல் செயற்கைக் கால் திட்டத்திற்கு £50,000 பவுண்களை வழங்கி இரண்டாயிரம் (2000) நம் உறவுகளிற்கு நடமாடும் சக்தியை அளித்தாள்.

எமது மக்கள் போரினால் பாதிப்படைந்த வேளையில் உலகில் பலபாகங்களிலும் நமது தாயகத்திலும் சுனாமி என்னும் பேரலை 26-12-2004ம் ஆண்டு பல மக்களின் உயிர்களைப் பறித்து அனர்த்த பூமியாக்கிய வேளையில் இத்தாக்கத்தை ஈடுசெய்ய அம்பிகையின் அடியார்கள் தாயக உறவுகளிற்கு பணம், உடைகள் மருத்துவ வசதிகள் எல்லாவற்றையும் வாரி வழங்கித் துன்பம் நீக்கினார்கள்.

2005ம் ஆண்டில் ஆலய நிர்வாக சபை தேர்தலில் வாக்காளர் பட்டியலில் சில முரண்பாடுகள் ஏற்பட்டமையால் நீதிமன்ற உத்தரவின்படி அறங்காவலர் சபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்று அடியேன் தலைமையில் ஓராண்டிற்கு பின் புதிய நிர்வாக சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஆலயம் நற்பணிகளாகிய, காக்கும் கரங்கள், அறிவுச்சுடர் செயற்கைக் கால் திட்டம், கணணி, மருத்துவ உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கும் வேளையில் உள்நாட்டுயுத்தம் முடிவிற்கு வந்து தொப்பூழ்கொடி உறவுகள் சொல்லணாத் துயரத்திற்கு ஆளாகிப் பல ஆயிரம் உறவுகளை இழந்தோம்.

எமது நாட்டின் நலம் கருதி 2010ம் ஆண்டு £30, 000 பவுண்களை இலங்கை இந்து மகாசபை ஊடாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களிற்கு அடியேன் நேரடியாகச் சென்று வழங்கும் பாக்கியம் கிடைத்தது.

இதனைத்தொடர்ந்து இரண்டாவது கும்பாபிசேகத்திற்கு உரிய வேலைகள் ஆரம்பமாகி ஆலயம் புதுப்பொலிவுடன் பளிங்குக்கற்கள் விஷ் தீரணமான மண்டபம், புதிய அலுவலகம் அமைக்கப் பெற்று 2011ம் ஆண்டு இரண்டாவது மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. எமது ஆலய அறங்கவாலர் சபை, நிர்வாக சபை பொதுச்சபை உறுப்பினர்கள் தாயகத்திற்கு நேரில் சென்று

பார்வையிட்டு, சிறு கைத்தொழில்கள், கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்புத்திட்டம், பெண் தலைமைத்துவக் குடும்பத்தினருக்கும் நிதி உதவியும், கண்பார்வை இழந்தவர்களிற்கு கண்சிகிச்சை மூக்குக்கண்ணாடி சேவையிலும் ஈடுபட்டமை குறிப்பிடப்பட வேண்டியவை.

2015 ஆம் ஆண்டிலிருந்து தற்போதைய நிர்வாகசபை கிழக்கு மாகாணத்தில் சம்பூர் வீடமைப்புத்-திட்டத்திற்கு £20,000 பவுண்களும், ஜெயப்பூர்த்திட்ட முச்சக்கர வண்டிக்கு £10,000 பவுண்களும், பெண்கள் தலைமை குடும்பத்திட்டத்திற்கு நிதி உதவியும், விழிப்புணர்வற்றோர் சங்கத்தின்மூலம் பாடசாலை மாணவர்களிற்கு உபகரணங்களும், பாற்பண்ணை திறப்பதற்கு பத்து (10) கோமாதாக்களும், குழாய்க்கிணறுகள் வறுமைக் கோட்டில் உள்ள நோயுற்றவர்கட்கு நிதி உதவியும், மருத்துவ மனைகளிற்கு உபகரணங்களிற்கு £7000 பவுண்களும் வறுமைக்கோட்டில் வாழும் மாணவர்களிற்கு நிதி உதவியும் வழங்கி பாரிய சேவையை செய்து கொண்டுவருகிறார்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக வெள்ளிவிழா ஆண்டை நிறைவுபடுத்தும் முகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாதிரிக் கிராமங்கள் (Model Villages) அமைக்க எமது ஆலய இளைஞர்கள் சபையின் ஆலோசனையை ஏற்று தலா £25,000 பவுண்களை செலவு செய்யத்திட்டமுள்ளமை பெருமைக்கும், பாரட்டுதற்குமுரியவை.

எம்பிராட்டியின் கருணையினால் அடியார்கள் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற ஒன்பது வாரங்கள் எலுமிச்சம்பழ விளக்கு ஏற்றித் தேவையான வரங்களை, வரன்களை, மழலையை, கல்வியை, செல்வத்தை, மனையை, துணையை, நோயற்ற வாழ்வை அருளைப் பெற்று "அம்மனைச் சரணயடைந்தால் அதிகவரம் பெறலாம்" என்ற தாரக மந்திரத்தை நிலைநிறுத்திய தெய்வத்தை ஈழமக்கள் வாழ்வு வளம் பெறவும் சமாதானம் நிலவவும் எம்பிராட்டியின் பாதார விந்தங்களில் வணங்குகின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்கும் உலகமெல்லாம்

**கலாநிதி அப்பையா தேவசகாயம்**
இணைஸ்தாபவர் அறங்காவலர்,
செயலாளர் அறங்காவலர் சபை,
இளைப்பாறிய வருமானவரி சுங்க இலாக உயர் அதிகாரி (U.K)



# அன்னையே வணங்குகிறேன்...

அம்மனின் சேவையில்

**க. கேசவன்**, செயலாளர் நிர்வாகசபை.

எங்கள் ஆலய வெள்ளி விழா மலரில் எனது வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஆலய ஆரம்ப காலங்களில் ஓர் சிலரின் ஏளனக் கதை "அங்கே பாருங்கள் 3 படங்களை எடுத்துச்சென்று அம்மன் கோவில் ஆரம்பித்துவிட்டார்களாம்." ஆம் ஆம் அந்த 3 படங்கள் இன்று இங்கிலாந்து நகரில் ஓர் பெரியகோவில் என்று சொல்லுவதற்கு அமைய வளர்ந்து வெள்ளி விழாக் கொண்டாடுகிறது.

இன்று உலக வாழ் மக்களுக்கு ஈலிங் அம்மன் கோவில் என்றால் தெரியாதவர் யாரும் இல்லை.

"பேச்சு பெரியதே ஆனால்
மவுனத்தின் மொழி அதைவிடப் பெரியது"
- கிருபானந்தவாரியார்.

"முயற்சி இல்லை என்றால் உன்னை ஜெயிக்க முடியாது
முயற்சி இருந்தால் தோற்க முடியாது"
- அப்துல் கலாம்.

அந்த வகையில் முன்னோர் வாரியார் சுவாமிகள், அப்துல் கலாம் ஆகியோர் கூறியது போல் நமது ஆலய அறங்காவலரும் அவர்களுடன் உறுதுணையாக இருந்து எமது ஆலயத்தை உருவாக்கிய நம் பெரியோர்கள், சகோதர, சகோதரிகளுக்கும் ஆலய சிவாச்சாரியார்களுக்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

1991ஆம் ஆண்டு ஆலயம் ஆரம்பித்து நான்கு வருடகாலத்தில் 1995இல் ஆலயக் கட்டிடம் வாங்கி அடுத்த நான்காவது ஆண்டில் 1999இல் மகா கும்பாபிஷேகம், அலங்காரத் திருவிழா கண்ட அம்மன் கோவிலில் எனக்கு ஓர் திருவிழா கிடைக்கவில்லை என்று மனக் கவலை அடைந்தேன். 2000இல் மிலேனிய வருடத்தில் கொடியேற்றத் திருவிழா கண்ட அம்மன் என் மனக் கவலை தீர்க்க எனக்கு 21ம் நாள் திருவிழா தந்து அன்றைய தினம் நாகபூசணியாக அருட்காட்சி அளித்து அதனைத் தொடர்ந்து இப்போது மகா துர்க்காவாக தரிசனம் தருகிறாள். எங்கள் அம்மன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்.

"மௌனத்தின் பலன் பிரார்த்தனை
பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை
நம்பிக்கையின் பலன் அன்பு
அன்பின் பலன் சேவை
சேவையின் பலன் ஆன்ம நிம்மதி"
- அன்னை தெரேசா

எம் மக்கள் அம்மனை பிராத்தனை செய்தார்கள்
பிராத்தனையின் பலன் அம்மன் மீது நம்பிக்கை வைத்தார்கள்
நம்பிக்கையின் பலன் நிர்வாகம் மீது அன்பு கொண்டார்கள்
அன்பின் பலன் தாயகத்தில் கஷ்டங்கள்படும் குழந்தைகளுக்கு சேவையை நிர்வாகம் செய்தனர்
சேவையின் பலனாக எம் மக்களுக்கு அம்மன் ஆன்ம நிம்மதி தருகிறாள்

தாயகத்தில் பல கஷ்டங்களுக்கு இடையில் இருக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இல்லங்களை உருவாக்கி 500க்கு மேற்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க 16 இல்லங்கள் உள்ளன.

எம் இனத்தவர்கள் அம்மன் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக வாரி வாரி வழங்கியதன் பலனாக எம்மால் எளிதாக இப்பணியை மேற்கொள்ள முடிகிறது.

கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் எனத் தவிக்கும் போது Dec 26 2004 ஓடி வந்தது கடல் அலைகள் (Sonami) கடலோரத்தை அழித்தது. இதை அறிந்த நம் இனத்தவர்கள் உறங்கவில்லை ஆலயத்திற்கு ஓடி வந்தார்கள் கஷ்டப்படும் நம் இனத்திற்கு ஆடைகள் வழங்க மலைபோல் கொண்டு வந்து குவித்தார்கள், பண உதவி என்றதும் £185,000 வாரி வழங்கினார்கள். இப்பொழுது தாயகத்தில் இறுதிப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்கள் இருக்கும் கிராமங்கள் பல அழிந்து கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். அவர்களுக்கு ஓர் வழிகாட்டவேண்டும் என்று ஆலயம் மூலமாக பல திட்டங்களை உருவாக்கி உதவி புரிந்து வருகின்றோம்.

கடந்த வருடம் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவி என்று

1) காக்கும் கரங்கள் திட்டம்
2) வாழ்வாதாரத் திட்டம்
3) மீள் குடியேற்றத் திட்டம்
4) கணவனை இழந்த பெண்கள் முன்னேற்றத் திட்டம்
5) பெண்கள் முன்னேற்றத்திற்கான குடும்பத்திட்டம்
6) மாணவர்களுக்கான பல்கலைக்கழக உயர்கல்வித் திட்டம்
7) முச்சக்கர வண்டி வழங்கும் திட்டம்

என்று பல திட்டங்கள் மூலமாக தாயகத்தில் கஷ்டத்தில் வசிக்கும் நம் இனத்தை கட்டி எழுப்ப உதவிகள் புரிகின்றோம். உதாரணமாக சம்பூர் மீள்குடியேற்றத்திட்டம் மூலம் அங்கு வீடு அமைத்து, மலசலகூடம் அமைக்க பண உதவி வேண்டும் என்று பொது மக்களை வேண்டியதும் £15,000 உடன் வாரி வழங்கினார்கள். கடந்த 1/2 வருடங்களுக்கும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் முன்னேற்றத்திட்டம், கணவனை இழந்தவர் முன்னேற்றத்திட்டம் என வன்னிக்குச் சென்று சேகரித்து அதனை பரிசீலனை செய்து மொத்தமாக £30,000 வழங்கப்பட்டது. அவர்களுக்கு நமது தலைவர் திரு R.D. Ratnasingam அவர்களும் முதல் அமைச்சர் விக்னேஸ்வரன் முன்னிலையில் உதவி வழங்கினார்கள். அத்தருணம் முதல் அமைச்சர் இந்த திட்டத்தை முன்னெடுத்து பரிசீலனை செய்த விதங்களைப் பாராட்டி நன்றாக விசாரணை செய்து பரிசீலனை செய்த திரு பாலசுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டினார். திருவிழாக் காலங்களில் தாயகத்தில் போராட்டத்தில் கால் இழந்தவர் பலர் அந்த வகையில் நாம் உடனடியாக 200முச்சக்கர வண்டி வேண்டிக் கொடுக்கவேண்டும். ஒரு முச்சக்கர வண்டி £50 மட்டுமே என்று குரல் எழுப்பிய போது பொது மக்கள் £14,000 வாரி வழங்கினார்கள்.

இதுவரை தாயகத்தை நோக்கி £2.4 மில்லியன் பணத்தை அனுப்பி இருந்தாலும் அன்னையின் பின் பெயரில் வெளிக்காட்டி நிற்பதாக எதுவும் இல்லை. எனவே இன்று வெள்ளிவிழாவை முன்னிட்டு எமது ஆலய நிர்வாக சபையும், அறங்காவலர் சபையும் இணைந்து நாம் தாயகத்தில் ஓர் பெரிய திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என ஆலோசித்து கிழக்கு மாவட்டத்திலும், வடக்கு மாவட்டத்திலும் £25,000 செலுத்தி இரண்டு கிராமங்களை எடுத்து அங்கு அவர்களுக்குத் தேவையான உதவிகள் வேலை வாய்ப்பு, கல்வி உதவி, மருத்துவ உதவி, என்று அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என முடிவெடுத்துள்ளோம்.

அந்த வகையில் அம்மன் கோயில் கட்டி வெள்ளி விழாக் கொண்டாடுகிறோம், அவளை நாம் கை கூப்பி வணங்குகிறோம். அவள் அருள் என்றும் இருப்பதினால் நாம் எல்லோரும் இணைந்து வாரி வழங்கி பல தொண்டுகள் செய்யக் கூடியதாக உள்ளது.



உ

ஓம் சக்தி

ஸ்ரீ கனக துர்க்கை அம்பிகையை என் மனதின்கண் முன்னிறுத்தி, பேரன்புடைய அம்பிகை அடியார்களுக்கு என் முதல் வணக்கம்.

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வெள்ளி விழாவிலே கடந்த 25 ஆண்டு கால ஆலய வளர்ச்சியினை மீட்டுப் பார்ப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். 1991 ம் ஆண்டு புலம் பெயர்ந்து இந்நாட்டிற்கு வருகை தந்தகாலத்தில் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் வழிபாட்டிற்காக இவ்வாலயத்துடன் தொடர்பு ஏற்பட்டதுடன் ஆலய ஆயுட்கால அங்கத்தவர்களாகவும் இணைந்து கொண்டோம். அன்று முதல் இன்று வரை இறைபணியுடன் வாழ்க்கையை நடாத்தி வருகின்றோம்.

மேலும் இவ்வாலயத்திற்கு நிரந்தர கட்டிடம் வாங்கி முதன்முதல் அம்பாள் கருவறைக்கு அத்திவாரம் இடும் வைபவத்தில் ஒரு சங்கு வைக்கும் பாக்கியம் எனது குடும்பத்திற்கு கிடைத்தது ஸ்ரீ கனக துர்க்கை அம்பிகையின் ஆசி என்றே கூறவேண்டும். அன்று முதல் இவ்வாலயத்தின் வளர்ச்சியிலே பங்கேற்று வந்திருக்கின்றேன்.

இவ்வாலயம் அடியார்களின் பேர் உதவியினால் மிகவும் உன்னதமான ஆலயமாக வளர்ந்து தன் அருட்பணியோடு அறப்பணியுடன் தாய்நாட்டில் பல் வேறு சமூகப் பணிகளோடு ஈடுபட்டுள்ளதினால் இன்று உலகப் புகழ்பெற்று விளங்குகின்றது. அதமட்டுமல்லாது தாய்நாட்டுடனான சமூகப்பணியை முதன்முதலில் ஏற்படுத்திய பெருமையும் இவ்வாலயத்திற்கே உரியதாகும். ஆலயத்தில் சில பல தொண்டுகள் செய்து வரும் வகையிலே கடந்த நான்கு ஆண்டுகளாக ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபையிலே பொருளாளராகக் கடமை ஆற்றும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது அம்பாளின் திருவுளமே எனலாம்.

இக்காலத்தில் எமது நிர்வாகம் ஏற்படுத்திய தாய் நாட்டை நோக்கியதான சமூகப்பணிகளிலே 1) சம்பூர் கிராமமக்கள் மீள் குடியேற்றம் 2) பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கல்வி கற்க முடியாத மாணவர்களுக்கான உதவித்திட்டம். 3) கை கால் அவயவங்களை இழந்தவர்களுக்கு ஜெயப்பூர் நிறுவனம் ஊடாக செயற்கை அவயவங்களை பொருத்தும் திட்டம். 4) முச்சக்கர வண்டிகள் வழங்கும் திட்டம். 5) விழிப்புலன் அற்றோர் சங்கத்திற்கு பால் பண்ணை அமைப்பதற்கு உதவித்திட்டம். 6) கிழக்கு மாவட்டத்தில் கஞ்சிக்குடிச்சாறு கிராமத்திற்கு ஒரு ஓட்டோ வாங்கிக் கொடுத்ததோடு ஒரு பொதுக்கிணறு அமைத்துக் கொடுத்தது. 7) வாழ்வாதார நிலைக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உதவும் திட்டம். என்பன மிகவும் குறிப்பிடத் தக்கவையாகும். இத்திட்டங்களை அமுல்படுததுவதற்கு அடியார்களாகிய உங்கள் உதவிக்கரங்களினால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. மேலும் வெள்ளி விழா ஞாபகார்த்தமாகத் தாய்நாட்டிலே இரண்டு மாதிரிக் கிராமங்களை ஏற்படுத்துவதற்காக முடிவு எடுத்திருக்கின்றோம்.

அம்பிகையின் பெருங் கருணையினாலே நாங்கள் உங்களிடத்திலே கேட்கும் உதவிகளுக்கு எப்பொழுதும் அள்ளித் தந்து கொண்டு இருக்கின்றீர்கள் என்பதை மறப்பதிற்கில்லை.

அம்பிகையானவள் உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றி அருளாட்சி புரிந்து ஒரு சபீட்சமான வாழ்வைத் தந்து ஆசீர்வதிக்க ஸ்ரீ கனக துர்க்கை அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் இறைபணியுடன்

**கந்தையா சர்வானந்தன்** - பொருளாளர் 2012-2016

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை



Charity - No - 1014409

தென்பாண்டி மதுரையில் ஆண்மையை அடக்கிய மீனாட்சியாய்த் தில்லையில் ஆண்மைக் கடங்கிய சிவகாமியாய் காமகோடியைப் பெற்ற காஞ்சியில் காமாட்சியாய்க் கடைத்தேற வழிகாட்டும காசியில் விசாலாட்சியாய்க் காட்சியளிக்கும் பராசக்தி கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் விளங்கும்" கனக துர்க்கையாய்" கடல் கடந்து நம்மைக் காக்க வந்துள்ளாள்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த நம் தாய் நாட்டைப்பிரிந்து நாம் பிறந்த வீட்டைத் துறந்து உற்றார் உறவினைரைப் பிரிந்து அந்நிய நாட்டில் அடைக்கலம் கோரி அவல வாழ்வு வாழும் எங்கள் துயர் தீர்க்கக் கருணையே உருவாம் கனகதுர்க்கை 1991ம் ஆண்டு ஆவணி மாதம் 10ம் திகதி லண்டன் மாநகரில் குங்குமம் தாங்கிய குத்து விளக்குகளின் மத்தியில் கோயில் கொள்ள அமர்ந்து விட்டாள். ஆம்! அன்பர்களே காளிகாம்பாளின் கருணை பெற்ற உயர்திரு சிவாச்சாரியாரின் தலைமையில் சுடர்விட்டுப் பிரகாசித்த குத்து விளக்குகள் ஒளிகாட்ட அதை ஏற்றி வைத்த மாதர்களின் மலர்முகங்கள் புன்னகைக்க அத்தனை ஒழுங்குகளையும் செய்த ஆண்மையாளர் அடக்கமாய் உவகை கொள்ளக் கலியுகத்தில் கடைத்தேற வழிகாட்டும் நாம சங்கீர்த்தணம் நாலாபக்கமும் முழங்க அர்ச்சனையின் போது கொட்டிக் கிடந்த மலர்களும் குறுக்கும் நெடுக்கும் ஓடித்திரிந்த குழந்தைச் செல்வங்களும் குதூகலிக்க ஆணவ அரக்கர் முன் கோரவடிவம் கொள்ளும அன்னை ஆறுதல் தந்திடும் அழகின் வண்ணமாகக் கனகதுர்க்கையெனக் கோயில் கொண்டு விட்டாள்.

அன்றைய தினம் தொடங்கி அன்னையின் அருளாலும் கூடிய அன்பர்களின் முயற்ச்சியாலும் ஒவ்வொரு செவ்வாய் வெள்ளியிலும் கனகதுர்க்கை அம்மனுக்கு விசேட பூஜாராதனைகளும் பஜனைப்பாடலும் மாகேசுர பூஜையும் எந்தவிதக்குறைவும் இன்றி நடந்து வருகின்றது. ஆயினும் அன்பர்களே ஒரு குறை உண்டு. நாம் பிறந்த மண்ணில் ஊரே விழாக்கோலம் கொள்ள மேளதாளம் முழங்க தீவர்த்திகள் ஏழு ஊருக்கு வழிகாட்ட ஊர்க் கோலம் போகும் அன்னை பூசகரின் காரில் அடுத்தவர் அறியாமல் பயணம் செய்கிறாள். ஆம்! நம்முள்ளே நன்மை தங்கிட நடக்கும் துர்க்கைக்கு ஒரு நிரந்தர வழிபாட்டிடத்தைத் தேடித் தரும் பாரிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

கனகதுர்க்கை அம்மனுக்கு ஒரு நிரந்தர வழிபாட்டிடத்தை அமைப்பதை முக்கிய நோக்கமாய்க் கொண்டு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை இந்த நாட்டுச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அரசாங்க அனுமதியடன் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலய அறக்கட்டளையின் அரசியல்யாப்பின் விதிகளுக்கு இணங்க 1993 -ம் ஆண்டு தமிழ் புத்தாண்டு தினத்தன்று பொதுச்சபையினால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆலயபரிபாலன சபை ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

ஆலயக் கட்டிட நிதிக்கு தங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலய அறக் கட்டளையின் வருடாந்த சந்தாதாரராகவோ ஆயுட்கால சந்தாதாராராகவோ அதற்குரிய பணத்தைக் கட்டி அங்கத்தினராகலாம். நாளாந்த பூஜையின் மூலம் கிடைக்கும் வருமானமும் சந்தாப்பண வருமானமும் ஆலயக்கட்டிட நிதிக்கென ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் சேமிக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட ஆலயபரிபாலன சபை ஆலயக் கட்டிட நிதிக்கான சேமிப்பைத் துரிதப்படுத்தும் நோக்குடன் ஒரு " பங்களிப்பு " த் திட்டத்தை வகுத்துள்ளனர். எம் அன்னையின் நிரந்தர வழிபாட்டிடத்திற்கான காணி, கட்டிடம் என்பனவற்றின் விலைகளையும் அதனைப்பொதுமக்கள் வழிபாட்டிடமாக மாற்றியமைக்க உள்ளூர் சபையின் விதிகளுக்கு இணங்க செய்யவேண்டிய

செலவுகளையும் கருத்தில் கொண்டு கட்டிட வல்லுனர்கள் ஆகக் குறைந்தது ஐந்து லட்சம் "பவுண்" (5,00,000) தேவையென கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த ஐந்து லட்சத்தையும் ஆயிரம் அலகுகளாகப் பிரித்து ஒரு அலகின் பங்களிப்பு ஐநூறு "பவுண் (500) ஆக நியமிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பமும் ஒரு அலகின் பங்களிப்பைப் பொறுப்பேற்று அதற்கெனத் தயாரிக்கப்பட்ட அட்டவணையில் தங்கள் குடும்பப் பெயரைப் பொறிப்பதன் மூலம் கட்டிட நிதிக்குப் பங்களிப்பதுடன் அக்குடும்பத் தலைவர் ஆலய அறக்கட்டளையின் ஆயுட்கால அங்கத்தவராகவும் மாறலாம்.

அன்னையின் அருள்வலியாலும் அவளைச் சார்ந்த அன்பர்கள் தவவலியாலும் அந்தப் பெருமுயற்சி அதி விரைவில் நிறைவேறும் எனப் பிரார்த்திப்போமாக! நிதிமிகுந்தவர் அலகொன்று வாங்குங்கள்! நிதிகுறைந்தவர் ஆலய கட்டிட நிதிக்குத் தங்களாலியன்ற நன்கொடை நல்குவீர்! அதுவும் அற்றவர் வாய் சொல் அருள்வீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!.

சாஸ்திரங்களின் சாரம் - நீயே!

சம்சாரக்கடலின் தோணியும் - நீயே!

மாலவன் மார்பில் திருமகள் - நீயே!

மகேசன் வாழ்வில் கௌரியும் - நீயே!

பரிவே உருவாம் சரஸ்வதி - நீயே!

நிறைவே ! துர்க்கா! நின் தாள் சரணம்!

" ஆதி சங்கரர்"

**P. தெய்வேந்திரம்**
தலைவர்
தர்மகர்த்தா சபை


**N. கிருஷ்ணராஜா**
தலைவர்
பரிபாலன சபை

(1991 இல் எழுதப் பெற்ற முதலாவது அறிவித்தல்)



உ

# அம்பிகையின் தொண்டனும் அறங்காவலர் சபை உறுப்பினனுமாகிய திரு. இ. கணேசராசாவின் உள்ளத்தின் இருந்து ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளுக்குச் சமர்ப்பிக்கும் வாழ்த்துச் செய்தி



"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

இலண்டன் ஈலிங் பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்பாள் ஆலயம் பொதுமக்களால் உருவாக்கப்பட்டு இன்று அவள் அருளால் பல இலட்சக்கணக்கான பக்தர்களைத் தனது அருளாட்சியிலே கொண்டிருக்கும் பெருமையை வார்த்தைகளால் சொல்லமுடியாது.

ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளின் அருள் இங்கு மட்டுமல்லாமல் இலங்கையிற் கூடப் பல இல்லங்களை அமைத்து முதியோர்களையும் சிறார்களையும் தனது அருளினாலே பராபரித்து வருகின்றது. இத்தகைய பெருமையும் சக்தியும் வாய்ந்த அம்பாளின் அருள் எம்மை இன்று இக்கோயிலின் 25வது வருட வெள்ளி விழாவிற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறதென்றால் அம்பாளின் அருட்கடாட்சத்தை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. இந்த வெள்ளி விழாவை இளைஞர் பேரவை முன்னின்று நடாத்துவது எமது இளம் சமுதாயத்தினர்க்கு அம்பாள் கொடுத்த வரப்பிரசாதமாகும்.

துர்க்காவின் புகழைப் பாடுங்களேன். துர்க்காவின் நாமம் சொல்லுங்களேன், "அம்மா" என்று அவளை அழையுங்களேன். அவள் அன்புடன் ஓடி வருவாளே!

ஸ்ரீ கனக துர்க்காவின் அருளாட்சி தொடர்ந்து எமது மக்களுக்குக் கிடைத்து எல்லோரும் இனிதே வாழவேண்டுமென அன்புடன் வாழ்த்துக்கின்றேன்!

சுபம்!

**திரு. இ. கணேசராசா**

அறங்காவலர் சபை

ஸ்ரீ கனக துர்க்கை ஆலயம் இலண்டன், ஈலிங்

# இடைவிடா முயற்சியால் இன்று இமயமாய் உயர்ந்து நிற்கும் எங்கள் அம்மன் ஆலயம்



**திரு சபா. அபயலிங்கம்.**
அறங்காவலர் சபைப் பொருளாளர்.

லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு நிகழ்வுக்கு எனது சிந்தனையில் உதித்தவைகள் இடம் பெறுவது எனக்குக் கிடைத்த வாழ் நாள் பேறாகக் கருதுகின்றேன். தன்மான உணர்வும் சமயப்பணியும் இருவிழிகளாகக் கொண்டு தெய்வ வழிபாட்டை புலம் பெயர் தேசத்தில் லண்டன் மாநகரில் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் திறம்படத் தம்பணியைத் தொடர்வதையிட்டு ஆரம்பகாலத் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களில் ஒருத்தனாக மனநிறைவும், பெருமையும் அடைகின்றேன்.

ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியானது ஓர் குழந்தையின் வளர்நிலையைப் போன்றே பார்க்க முடிகின்றது. குழந்தை பிறந்து தரையில் உருண்டு பிரண்டு தவழ்ந்து நடந்து செல்லும் நிலை அடையுமுன் தள்ளு வண்டியில் வைத்து கொண்டு செல்லுவது போன்றே! அம்மா ஸ்ரீ கனக துர்க்கையும் தள்ளு வண்டியில் வைத்து இடம்மாறி மாறி நடமாடும் கோயிலாக, தெய்வமாக, பூசை ஆராதனைகள் ஏற்று மக்களை இரட்சித்த வரலாறு பலருக்குத் தெரியாது.

அன்று இவ் ஆலயம் தனிச்சிறப்போடு மிளிர்வதற்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆரம்பகால பூசகர்களான திரு. கண்ணன் குருக்கள், திரு. பவன் குருக்கள், பிரம்ம ஸ்ரீ க. பாலகுமாரசர்மா குருக்கள் அவர்களின் செயற்பாடும் நினைவில் கொள்வது மேலான செயலாகும்.ஸ்ரீ பிரமஸ்ரீ பாலகுமார குருக்கள் அவர்களின் பணி இன்றும் சிறப்புறத் தொடர்கின்றது. இலட்சக்கணக்கான மக்களின் துயர் தீர்க்கும் மருந்தாக அனைவரது நெஞ்சிலும் நிறைந்திருக்கும் "ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்" நாமத்தைச் சூட்டிய பெருந்தகை சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியர் அவர்களையும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருவதில் பெருமை கொள்கின்றேன். தர்மகர்த்தா சபையினரால் நிருவகிக்கப்பட்டு வந்த பணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற பெருநோக்கோடு அவர்களால் தெரிவு செய்யப்படும் ஓர் நிருவாகசபையும் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு சபைகளும் இணைந்து தத்தமது பணிகளைத் திறம்படச் செய்வதாகவே கருதுகின்றேன். இவ் ஆலயத்தின் சிறப்புக்கு மகுடமாக அமைந்த ஆரம்ப கும்பாபிஷேக நிகழ்வை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். தனது வருமானம் கருதாது தாயகத்தில் இருந்துவருகை தந்த பல குருமார்களின் துணையோடு கும்பாபிஷேக நிகழ்வையும் அதன்பின் பன்னிருவருடங்களில் ஓர் கும்பாபிஷேக நிகழ்வையும், பன்னிருவருடங்கள் ஆலய உற்சவ கொடியேற்ற நிகழ்வையும் நடாத்திய பெருமகனார் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களையும் நாம் என்றும் மறவோம்.

உளம் நொந்து உருக்கமுடன் வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்பாள் அருளால் இன்னும் இவ் ஆலயம் சார்பாகப் பலதிருப்பணிகளும் தாயகத்தில் தனித்தும் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் பலசிறப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளதை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இன்னும் சிறார்களின் தமிழ் கல்வி சமயக்கல்வி இவ் ஆலயத்தில் புகட்டுவதோடு பிரித்தானியாவில் உள்ள தமிழ் பாடசாலைகள் சிலவற்றுக்கு சமயபாட நெறி போதிப்பதற்கான செலவின் ஓர் பகுதியை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றோம்.

இவ்வாறான சிறப்பு அம்சங்கள் ஆலயத்தின் வளர்ச்சிக்கு மென்மேலும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. குறிக்கோளோடு பயணிக்கும் எச்செயலும் வெற்றிபெறும் என்பது உறுதி. இதுவே இவ்வாலய பரிபாலனத்தின் தாரகமந்திரமாகும். இப்பணி என்றும் தொடர ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனைப் பணிந்து என்னை இத் தொண்டுக்கு அமர்த்திய அமரர் திரு. பொன் தெய்வேந்திரம் அவர்களை நினைவு கூர்ந்து நிறைவு செய்கின்றேன்.



உ

ஓம் சக்தி

# தாயே திருவருள் புரிவாய் அம்மா

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவையார் வாக்குக்கிணங்க இலங்கை வாழ் தமிழர்கள் செல்லும் இடமெல்லாம் சைவ சமய மரபு, மொழி, கலை, கலாச்சாரங்களைப் பேணிப் பெருமை தேடுபவர்கள். அந்த வகையில் காலத்தின் கோலம் கருதி அமைந்த பெருமைமிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் வெள்ளி விழா காண்பதில் முதல் விஜயதசமி (1991ம் ஆண்டு) தொடக்கம் இன்றுவரை அம்பிகைக்கு அடியேவனாக, காவலாளியாக, தொண்டனாக வாழ வைத்த தெய்வத்தின் திருமலர்ப்பாதங்களை வணங்கி பேரானந்தம் அடைகின்றேன்.

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்:**

குபேரபூமியாக விளங்கும் இலண்டன் மாநகரில் ஈலிங்பதியில் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் சுவர்ணசொரூபியாகவும், சங்கு, சக்கர, திரிசூல நாயகியாகவும் (விஷ்ணு துர்க்கா) **நின்றவண்ணம்** திருவருள் புரிகின்றாள். பாரத தேசத்தில் தெலுங்கு தேசத்தில் விஜயவாடா என்னும் மாநகரில் இந்திரகில பர்வதத்தில் கிருஷ்ண நதிக்கரையிலும், சிவபூமியான இலங்கைத் திருநாட்டின் வடக்கே உள்ள சப்ததீவுகளில் ஒன்றாகிய புங்குடுதீவில், பட்டையக்காரன் வளவில், இயற்கையாக வேம்பும், அரசும் சேர்ந்த அற்புத விருட்சமும், புளியடித்துறை, கழுதைப்பிட்டி பிரதான வீதியில் அம்பிகை **இருந்தவண்ணம்** திருவருள் புரிகின்றாள்.

தெலுங்கு தேசமக்கள் எங்கள் ஆலயத்துக்கு குறிப்பாக தங்களது விசேட நாட்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் பெருந்திரளாக வந்து பிரார்த்திப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்டவைகளுக்குச் சான்றாகக் திருமூலர் திருமந்திரத்தில் கூறுகிறார்.:

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனேன்மணி என்ன
வருபல வாய் நிற்கு மாமது தானே.

அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் மும்மண்டலங்களாக விளங்குபவளும், பேரழகு வடிவுடையவளும் ஆகாயவடிவானவளும், உலகைப் பரிந்து காக்கும் செவ்வெளியுள் உள்ளவளும் நாரயணனுக்குப் படைத்தல் தொழில் நடத்த மாயை உருவை வழங்கியவளும் பற்பல நிறத்தில் வாசம் செய்பவளும் மகேசன் சக்தியாகி கருநிறத்தில் திகழ்பவளும் சதாசிவ சக்தியாகி நினைப்பது நிறைவேற மனத்தில் விளங்குபவளும் இவ்வாறாத் திரிபுர சுந்தரி பல சக்திகளாக விளங்கும் என்பதாம்.

இச்சக்திகளில் மூவகையாக இச்சா, கிரியா, ஞானம் என்பது சிவனுடைய எண்ணம், செயல், அறிவு ஆகிய திறன்களாக உள்ளனர்.

கிரியா சத்தியானவள் உயிர்களுக்கு இன்பங்களை அருளும் பொழுது "பவானி" என்றும் அசுரர் போன்ற தீயசக்திகளை அழிக்க போரிடும் பொழுது "துர்க்கா" என்றும் நல்லவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் தீயசக்திகளைக் கண்டு சினங்கொள்ளும்போது "காளி" என்றும் உயிர்களை

காத்துநிற்கும் பொழுது "விஷ்ணு" என்றும் புருஷ சக்தியாகவும் போற்றப்படுகின்றாள்.

இலண்டனில் அம்பிகையின் சேவையில் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து வெள்ளிவிழா நடக்கும் நேரத்தில் நடமாடும் தெய்வமாக இருந்த அம்பிகைக்கு நிரந்தர இடமாக ஈலிங் கோவில் கொள்வனவு செய்யும் காலத்தில் மூன்று வாரங்களில் **£120,000** பவுண்களை பக்தர்கள் வாரி வழங்கினார்கள். அறங்காவலர் ஒன்பது பேரும், நிர்வாகசபை, தொண்டர்கள், அடியார்கள் என்னும் வகையில் ஒன்பது பேருமாகிய திரு. கிருஷ்ணராசா (சட்டத்தரணி), திரு. சிவகுமாரன், திரு. கருணலிங்கம், திரு. பத்மலிங்கம், திருமதி கமலாசினி சிவபாதம், செல்வி பாலேஸ்வரி ஆறுமுகம், அமரர்களாகிய திரு. பொன். அமிர்தநாதன் (கட்டிட பொறியியலாளர்), திரு ஜெய்ஜெம் அவர்களுடன் அடியேனும் சேர்ந்து ஒவ்வொருவரும் **£5000** பவுண்களுக்கு மேலதிகமாக சேகரித்துப் பொதுமக்களின் கோவிலாக **09-06-1995**ல் கைச்சாத்திட்டு **07-07-1995**ல் அம்பிகை ஈலிங் பதியில் குடிபுகுந்தாள். இப்பணத்தை விட நேரடியாக நிர்வாகத்திடம் அன்பளிப்பு செய்த அடியவர்களும், ஆயுள் கால அங்கத்தவர்களாகவும் சேர்ந்து ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

இவைகளை நினைக்கும் பொழுது வள்ளுவப் பெருந்தகை கூறிய

நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டிடும் (திருக்குறள் -28)

மேற்கூறிய வாசகத்தில்

பயன்நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோர்கள் உலகில் மொழிகளைக் காப்பதுபோல எம்மவர் தமிழ் மொழியின் சிறப்பை உலகில் அழியாமல் காப்பதுபோல் அம்பிகையின் பக்தர்களாகிய யாம் இலண்டனில் நாம் மறைந்தாலும், வாழையாடி வாழையாக எம்மவர் செய்த தவப்பயனால் அமைத்த ஆலயம் பிரசித்தி பெற்று ஆன்மிக சமூக வளர்ச்சிக்கு ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூண்றும் என்பதில் ஐயமில்லை.

இந்நேரத்தில் பராசக்தியிடம் பொன்வேண்டேன், பொருள் வேண்டேன், மண்ணிலே மகாராசர் தருகின்ற புகழ் வேண்டேன், ஊன்வேண்டேன், தேவர் வாழும் உலகும் வேண்டேன். தாயே என் குலம் தழைக்க, எம் இலங்கையில் தமிழ் இனம் சீரோடும் சிறப்போடும், சுதந்திரம் பெற்று சமாதானமாக வாழ "தாயே திருவருள் புரிவாய் அம்மா" என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

என்னை இறைவன் நன்றாக படைத்தனன்
தனக்கு நன்றாக திருப்பணி செய்யுமாறே

**இரா. ச. பாலசிங்கம்**
நிர்வாகசபை தலைவர் (1995 /1997)
ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்,
இலண்டன்



# மக்கள் சேவையே - மகேசன் சேவை

– சொ. கருணைலிங்கம்

(முன்னாள் நிர்வாகசபைத் தலைவர்)

எமது ஆலயத்தின் 25வது ஆண்டு விழாவிற்கு வாழ்த்தும் செய்தியளிப்பதில் பெருமகிழ்வு எய்துகிறேன். இவ்வாலய வரலாற்றின் பதிவுகளில் நானும் பங்கெடுத்தவன் என்ற வகையிலும் நிர்வாக சபைத்தலைவராக நான் செயலாற்றிய காலப்பதிவுகளும் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததையிட்டு ஆனந்தமடைகிறேன்.

நல்ல இளைஞர்களின் கைகளில் சமுதாயத்தின் எதிர்காலம் என்ற கருத்துருவில் எண்ணற்ற நம்பிக்கைகொண்ட நான் எமது நிர்வாக சபைப் பகுதியில் உருவாக்கிய இளைஞர் பேரவை இன்று ஆலயத்தின் செயற்பாடுகளில் வேரூன்றியிருப்பதுடன், ஆன்மீக சமய செயற்பாட்டுடன் நின்றுவிடாது ஆலயங்களை சமூக செயற்பாடுகளில் ஈடுபட எமது ஆலயம் முன்மாதிரியாகச் செயற்பட்டு வருவதற்கு எமதாலய நிர்வாகத்துடன் பல்லாயிரம் அடியவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் உறுதுணையாக அமைந்திருந்ததென்பது போற்றுவதற்குரியது. கடந்த பதினைந்து வருடங்களிற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட "காக்கும் கரங்கள்" திட்டம் இன்று வானளாவி வளர்ந்துள்ளமை சான்றாகும்.

சாதி, மத, சமூக வேறுபாடின்றி எம்மால் அன்று ஆரம்பிக்கப்பட்ட ஆதரவற்ற சிறுவர் இல்லங்கள், மட்டக்களப்பு, பதுளை, திருமலை வவுனியா, மன்னார், யாழ், முல்லைத்தீவு என விரிவடைந்து இன்று பெருவிருட்சமாக வளர்ந்து எம்மவர் அன்னையின் அரவணைப்பில் மகிழ்வுறும் செய்தி மகிழ்ச்சியளிக்கிறது.

கண்ணி வெடியால் காலிழந்தவர்க்கு அணைக்கும் கரங்களாகவும் மாணாக்கர் கல்வி வளர்ச்சிக்காகவும் கணணிப்பயிற்சி நிலையங்களாகவும் தாயகமெங்கும் பரந்துபட்ட சேவையாற்றும் எமது ஆலயம் இன்று மேலும் மேலும் வளர்ச்சியடைந்து பரந்துபட்ட சேவையாற்றுவதையிட்டு இப்புனித பெரு நாளில் மகிழ்ச்சியவுடன் மேலும் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.



# தொன்மை நிறைந்த விநாயக வழிபாடு

**திரு. தா. யோகநாதன்**
முன்னாள் தலைவர், பொருளாளர்

நம் நாளாந்த வாழ்வோடு பின்னிப் பிணைந்தவற்றுள் சமயமும் ஒன்றாகும். ஒவ்வொருவரும் தம் பாரம்பரிய மரபுகளிற்கும் நம்பிக்கைகளிற்கும் ஏற்ற வகையில் சமயத்தைக் கைக்கொண்டு எல்லாம்வல்ல இறைவனைப் பல்வேறு வடிவங்களில் வணங்குகின்றனர். இன்று இந்துக்களின் வாழ்வியலில் அறுவகைச் சமயங்கள் ஒன்றிணைந்து காணப்படுகின்றது. இச் சமயங்கள் தோற்றம் பெற்ற இடமாக பாரத பூமி விளங்குகின்றது. சமயங்களை இரு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். வேதங்களை முதன் நூலாக ஏற்பவை ஒரு பிரிவாகவும் ஏற்காதவை மற்றெரு பிரிவாகவும் உள்ளன. அதாவது வேதங்களை ஏற்றவை வைதீக சமயம் எனவும் வேதங்களை ஏற்காதவையே அவைதீக சமயம் எனவும் பிரித்துள்ளனர். வைதீக சமயங்கள் ஆறும் வேதங்களை பொது நூலாகவும் ஆகமங்களை சிறப்பு நூலாகவும் கடைப்பிடித்து வருகின்றன. அவையாவன காணாப் பத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பனவாகும். அறுவகைச் சமயங்களைப் பற்றி திருமுறைகளிலும் மெய்கண்ட சாஸ்த்திரங்களிலும் கூறப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தர் "முன்னமிரு மூன்று சமயங்கள் அவையாகிப் பிள்ளையருள் செய்த பிறையாளன்". எனவும் சேக்கிழார்" ஆறுசமயத்தலைவராய் நிண்டவருக்கு அன்பராய் மறு சமயச் சாக்கியத்தம் வடிவினால் வரும் தொண்டர்....." எனக் குறிப்பிட்டுள்ளமையை காணலாம். இந்தவகையில் இந்து மதத்தவர்களால் சிறப்பாக வழிபடப்படும் தெய்வங்களில் ஒன்றாக விநாயகர் திகழ்கின்றார். எந்தச் செயலையும் தொடங்கு முன் விநாயகரை வணங்கியே செய்யும் மரபு நீண்ட காலமாக மக்களிடையே நிலவி வருகிறது.

விநாயகர் மஞ்சள் மா, சாணம், அறுகம்புல் போன்ற பொருள்களால் எளிய முறையில் எழுந்தருளக் கூடியவராகவும், ஆல மரத்தடி, அரச மரத்தடி, ஆற்றங்கரை, சந்தி சாலைகள் என எங்கும் எழுந்தருளுபவராக இருப்பதனால் மக்களால் விரும்பி வணங்கப்படுகின்றார். காணாபத்திய சமயத்தவர்களது முழுமுதற் கடவுளாகிய விநாயகர் ஏனைய இந்து மத பிரிவினராலும் பொதுத் தெய்வமாக போற்றப்படுகின்றார். சமண சமயத்தவர்கள்" அருக நாயகர்" என்றும் பௌத்தமதத்தினர் "கணபதி தெய்யே" எனக் கூறி வழிபடும் தெய்வமாக விநாயகர் விளங்குகின்றார். விநாயகர் வேறு சிவன் வேறு அல்லர் என்பதை கந்தபுராணம், விநாயக புராணம் எடுத்தியம்புகின்றன. பல பெயர்களால் கடவுளை குறிப்பிட்டு வணங்கிய போதும் கடவுள் ஒருவரே எனும் இருக்கு வேத மகா வாக்கியத்தை இவ்விடத்தில் உளம்கொள்வது சாலப்பெருந்தும். ஆதலால் விநாயகர் முதலியோரும் அவருடைய திருவருட் சக்தியாம் சக்தியும் சிவமும் நெருப்பும் அவன் சூடும் போல ஒன்றானவையே. ஆகவே சிவபெருமான், உமாதேவியார், விநாயகர் என்று பலபெயர்கள் இருந்தாலும் பதி ஒரே பொருளாம் இதனையே அப்பர் சுவாமிகள் அழகாக "ஒருவர் தாம் பல பேருளர் காண்மினே" என்றார் பிள்ளையார் வழிபாடு இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, பர்மா, சீயம், ஜவா, சுமத்திரா, போர்ணியே, கம்போடியா, இந்தோனேசியா, திபெத், தாய்லாந்து, ஆப்கானிஸ்தான், மங்கோலியா, ஜப்பான், மெக்சிகோ, எகிப்து, கிரேக்கம் போன்ற பல நாடுகளிலும் வெவ்வேறு பெயர்களில் பலநூற்றாண்டுகளாக நலவி வரும் சான்றுகள் காணப்படுகின்றன. எனினும் இன்றும் இந்து சமய வழபாட்டு மரபில் விநாயகர் முன்னிலை பெறுவதும் ஈழத்து வரலாற்றில் விநாயகர் வழிபாடு பெற்றிருக்கும் செல்வாக்கினை காணக்கூடியதாக உள்ளது. இருக்கு வேதத்தில் "கணானம் த்வாம் கணபதிம்" என்றும் தைத்திரிய ஆரணியத்தில் கணபதி என்பதை " தந்தின்" என்றும் (அதாவது தந்தத்தை உடையவர்) தமிழ் மக்களின் பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில் விநாயகர் வழிபாடு பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளமை மூவாயிறம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையை காட்டுகின்றது. இந்தியாவில் குப்தர் காலத்திலே கணபதி வழிபாடு சிறப்பாக இடம்பெற்றுள்ளதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. அபராபதி பாணியிலே

துதிக்கை என்பவற்றுடன் கூடிய வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி 5 நூற்றாண்டிலிருந்து விநாயகர் படிமங்கள் பெருமளவில் கிடைத்தமையைக் காணலாம். மேலும் தக்கணதேசத்து சாளுக்கிய மன்னாட்சிக் காலத்திலே வாதாபியில் விநாயகர் வழிபாடு பெருவளர்ச்சி பெற்றதை தொல்லியல் சான்றுகள் இலக்கிய குறிப்புகள் கூறுகின்றன. மேலும் தக்கணதேசமானது விநாயக வழிபாட்டை தமிழ் நாட்டிற்குப் பரப்பியதிலே முக்கிய இடம் பெறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நந்திக் கலம்பகத்தில் கடவுள் வாழ்த்தில் "கரியின் முகவனை அரியின் மருகனை உருகி நிற்பவர் பெருமை பெறுவாரே" எனவும் தேவாரங்களில் " அங்கமும் தேவமும்....... " என்ற பாடலில் கணபத்தீச்சரம் பற்றிய குறிப்பும் வழிபாட்டுத் தொன்மையைக்காட்டுகின்றன.

விநாயகரின் பெருமையை உணர்த்தும் வரலாற்றுக் கதைகளும் பிள்ளையாரின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றனர். விநாயகர் மாம்பழம் பெற்ற கதை, வியாச முனிவர் சொல்ல விநாயகர் மகாபாரதம் எழுதிய கதை, சிவன் முப்புரங்கள் எரிக்கப் சென்ற கதை, ஔவையாரை விநாயகர் அகவல் பாடச் செய்து பூசை செய்வித்து தும்பிக்கையால் கையிலை சேர்த்த கதை, இந்திரனுக்காக காக வடிவில் வந்து அகத்தியரது கமண்டலத்தை கவிழ்த்து காவேரி நதியை ஓட வைத்த கதை கஜமுகாசுரனை வேதங்களுக்காக வதம் புரிந்து மெய்அறியு புகட்டி அருள் புரிந்த கதை துன்பத்தளையிலிருந்து அடியார்களை காத்தருள அனலாசுரன் என்னும் அரக்கனை உண்டு அந்த வெப்பம் தணிய ரிசிகன் அறுகம் புல்லால் அர்ச்சிக்க அனைத்து உயிர்களினதும் வெப்பம் தணிந்த கதை இப் புராண கதைகள் வரலாற்றினுயும் தொன்மையையும் எடுத்துக்காட்டுகின்றன.

விநாயகப் பெருமானுடைய தும்பிக்கையானது ஓங்காரமாகிய பிரணவ வடிவத்தை தொக்கி நிற்கின்றது. அதற்கு அடையாளமாக "உ" என சுழி இடுவது வழக்கம் இதில் வட்டமாக ஈடும் சுழி விந்துவாகிய சக்கரத்தையும், கோடு நாதமாகிய சிவத்தையும் குறிப்பதால் சக்தி சிவம் ஆகிய இருவரது உள்ளடக்கமாக பிள்ளையார் சுழி அமைந்துள்ளது. விநாயகருக்கு கிருதயுகத்தில் தீ போன்ற நிறமும் பத்துக்கரமும் சிங்க வாகனமும் திரேதயுகத்தில் வெண்ணிற மேனியனாய் ஆறு கரங்களும் மயில் வாகனமும் துவாபாரயுகத்திர் நான்கு கரங்களுடனான சிவப்பு மேனியனாகவும கலியுகத்தில் கபில நிறமும் இரு கரங்களும் குதிரை வாகனமும் உடையவராக காணபத்தியர் சித்தரித்து வழிபட்டுள்ளனர். ஆனால் நாம் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐங்கரனாகவே வழிபடும் மரபுடையோம். ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களையும் புரிவனவாகும். பாசம் ஏந்தியகை படைத்தலையும், தந்தம் ஏந்தியகை காத்தலையும், அங்குசம் ஏந்தியகை அழித்தலையும், தும்பிக்கை மறைத்தலையும், மோதகம் ஏந்தியகை அருளலையும் காட்டி நிற்கின்றன. நாம் கணபதியை பிரம்ச்சாரியாகவே கருதி வணங்குகின்றோம். ஆனால் காணாபத்தியரோ வல்லபை, நீலசரதவதி, சித்தி, புத்தி என நான்கு சக்திகள் உடனாக வணங்குகின்றனர்.


வட மொழியில் உள்ள எழுத்துக்கள் 51 இந்து எழுத்துக்களின் மூலமாய் பிரணவமாய் நின்று ஒலிக்கும் கணபதிக்கு 51 மூர்த்தங்கள் உண்டு. அவற்றுள் பாலகணபதி, தருணகணபதி, பக்தகணபதி, சித்திகணபதி,(அல்லது பிங்கல கணபதி) உத்திருஸ்டகணபதி, விக்கினராசகணபதி, சூரிப்ரகணபதி முதலாக முப்பத்திரண்டு மூர்த்தங்கள் வணக்கத்திற்குரியன. தமிழ் மக்கள் பிள்ளையார் என்ற திருநாமத்தைக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். காணபத்திய மதம் மகாராஸ்டிரத்தில் (பம்பாய்) முதன்மையான மதமாக நிலவிவருகின்றது. தோப்புக்கரணமிட்டும் சிதறு தேங்காய் அடித்தும் விநாயகர் சந்தியில் வழிபாடு நிகழ்த்துவர். செவிகளை மறுகைகளால் பற்றி இருந்த எழுந்து நெற்றியில் குட்டியும் வழிபடுதலே தோப்புக்கரணம் என்பதாகும். ஆணவத்தை அகற்றி பரமஞானத்தைப் பெறுவதைக் கறியீடாகக் காட்டி நிற்பதே சிதறுதேங்காய் அடித்தலாகும். காஞ்சிபுரம், ஸ்காந்தபுராணம் முதலான நூல்களில் கணபதியின் திரு அவதாரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்த நாயனார் "பிடியதனுருவுமை கொளமிகுகரியது......" என்ற தேவாரத்தினூடாக விநாயகரது தோற்றத்தினை அழகாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் வாதுளாகமம் சிவபெருமான் கண்டத்திலிருந்து விநாயகர் தோன்றியதாக கூறுகின்றது. விநாயகபுராணம் விநாயகர் தோற்றம் அவர் கஜமுகாசுரனை

வதைத்தமையாகிய செய்திகளை விரிவாக எடுத்துரைப்பதைக் காணலாம்.

ஒரு காலத்தில் கஜமுக அசுரன் சிவபெருமானை நோக்கி பெரும்தவஞ்செய்து அளவில்லாத பல வரங்களைப் பெற்றான் என்றும், அதனால் செருக்குற்று தேவர்களை பெரிதும் வருத்தினான் என்றும் தன்னைக் காணும் போது கரங்களைப் பொத்தி மூன்று முறை குட்டி கைகளை மாற்றி செவிகளைப் பிடித்து இருந்து எழுதல் வேண்டுமென பணித்ததுடன் செய்வித்தும் வந்தான். நாளாக நாளாக அவனது கொடுமை தாங்க முடியாமல் சிவபெருமானிடம் முறையிட்டனர் இதனையே சுன்னாகம் வரதபண்டிதர் "புதல்வனைத் தருவோம் போமின்களை".... என பிள்ளையார் கதையில் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். ஒரு நாள் சிவபெருமானும், உமாதேவியாரும் திருக்கைலாசத்தில் பூங்காவில் அமர்ந்திருந்ததருணம் அவர்களது திருவிழிகள் அங்குள்ள சித்திர மண்டபத்திலுள்ள ஓம் எனும் பிரணவ மந்திரம் ஆண் பெண் வடிவுகள் கொண்ட இரு யானைகளாக தோன்றின உமாதேவியார் அவற்றின் அழகிலே திரு நோக்கம் செய்தருளினார். அருட்பார்வையில் ஒவியங்கள் உயிர் பெற்றுக் களிறும் பிடியுமாக உயிர் பெற்று ஒன்றுகூடின அவ்வொன்று கூடலினால் விநாயகர் தோன்றியருளினார். அம்மையும் அப்பனும் அருள்நோக்கம் செய்த முதலிலே தோன்றியமையால் மூத்தபிள்ளை என்ற நாமத்தைச் சூட்டினார். சிவ மகாபுராணத்தில் சக்தியானவள் தன் முழு ஆற்றலையும் ஒன்று திரட்டி தோற்றுவித்த பிள்ளையே கணபதி என்றும் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் நீ ஆன்மாக்களின் விக்கினங்களைப்போக்கி அருள்வாய் என்றும், தேவர்களை துன்புறுத்தும், கஜமுகாசுரனை வதைத்து ஆட்கொண்டு தேவர்கள் துயர் துடைப்பாய் என்றும் பணித்தார். தந்தையின் கட்டளைப்படி கறுமுகாசுரனுடன் போரிட்டு அவனது ஆணவத்தை அடக்கி எலிவாகனமாக்கி தன்னை சுமந்திடும்பேறு கொடுத்ததுடன், தேவர்களது துயரும் துடைத்தருளினார். தேவர்கள் விநாயகரை போற்றி வணங்கினர். விநாயகர் முன்பாக மூன்றுமுறை தோப்புக்கரணம் இட்டு வணங்குவது எலிவடிவமாக இருக்கம் கஜமுகாசுரனை வழிபடுவதைக் குறிக்கலாம் எனவே விநாயகரை ஐந்துமுறை குட்டி ஐந்து முறை தோப்புக்கரண்மிட்டு வழிபடுதலே சிறந்ததென வழிவந்த பெரியோர்கள் குறிப்பிட்டமை சாலப்பொருத்தமானதும், சிந்திக்கத்தக்கதுமாகும்.

எம் நாட்டில் எம்மவர்கள் விநாயகரிலும் கணபதி வணக்கத்திலும் பெரிதும் ஈடுபாடுடையவர்கள் என்பதற்கு சான்றாக பலவுள போற்றப்டும் ஆலயங்களும் சுன்னாகம் வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதையும் சான்று பகிர்கின்றன. யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகரனால் கட்டப்பட்ட நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம். உருபிராய் கருணகரப்பிள்ளையார் கருணாகரத் தொண்டமானால் கட்டப்பட்டது. இரகுவம்சத்தை தமிழிலே தந்த அரசகேசரியினால் கட்டப்பட ஆலயமாக நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயம். சுழிபுரத்தில் கண்ணைக்கோதி காக்கைப்பிள்ளையார். ஆலயத்தை அழிக்க வந்த அந்நிய தளபதியின் கண்பார்வை இளந்த அற்புத வரலாற்றினை "பருளை விநாயகப் பள்ளின்" மூலம் அறியமுடிகின்றது. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் யாழ்ப்பாண இராட்சிய சூரியசக்கரவர்த்திகள் காலத்திற்கு முன்பே இக்கோயில்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தொடர்ந்து ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் காலங்களிலுமம் செல்வாக்குப்பெற்று விழங்கிறது. கிழக்கு மாகாணத்தில் அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் புகழ் பெற்ற தலமாகும். வடக்கே கீரிமலை போன்று கிழக்கே ஆடி ஆமாவாசை தினத்தன்று பிதிர்கடன் தீர்க்கம் புண்ணிய தலமாக விளங்குகின்றது. மலையகத்தில் விஜய நகர நாயக்கர் காலத்துச் சிறப்புப் பெற்ற கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயமும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றோடு மகோற்சவ சிறப்புக்களோ அன்றி மாபெரும் கோயில் அமைப்புக்களோ இல்லாமல் மகிமை பெறும் முறுகண்டிப் பிள்ளையார் சேவையையும் குறிப்பிடலாம். இவ்வகையில் இந்து மதத்தவர் மட்டுமல்லாது சமண, பௌத்த மதத்தவரும் வழிபாடாற்றும் விநாயக வழிபாடு மிகத்தொன்மை வாய்ந்தது.



# என் கடன் பணி செய்து கிடப்பதே!

**செல்லப்பா இராமச்சந்திரன்**
**முன்னாள் தலைவர், பொருளாளர்**

"சும்மா உறங்கும் பாம்புருவில்
மூலாதாரத்தில் இருப்பவளே
அம்மா, தேவி குண்டலி நீ
ஆனந்தப் பொருளே விழிப்பாயே"

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் இன்று வெள்ளிவிழாக் காண்பதை அறியும் போது கண்ணீர் மல்குகிறது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன் மூன்று படங்களுடன் தொடக்கப்பட்ட ஆலயம் இன்று பெரிய தோர் அருள்பாலிக்கும் ஆல விருட்சமாக வளர்ந்து இருப்பது மட்டும் அல்லாமல் மற்றைய
ஆலயங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்து இருப்பது வியக்கத்தக்கது. எத்தனையோ அடியார்களின் வேண்டுகோள்களையும், விண்ணப்பங்களையும், பிரார்த்தனைகளையும் ஏற்று அவர்களுக்கு அருள்புரிந்து கொண்டிருக்கும் எங்கள் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் இன்று தனது Ruby விழாவை நோக்கி அடி எடுத்து வைத்திருக்கிறது.

இந்த ஆலயத்தைத் தொடங்கவேண்டும் என்று வித்திட்ட அமரர் பொன் தெய்வேந்திரன் திரு.தேவ சகாயம் திரு S. சிறிரங்கன், திரு. S. அபயலிங்கம், திரு பிரேமசந்திரா பரமநாதன், அமரர் S. இராமச்சந்திரன், திரு தேவராஜா திரு. கணேசராஜா ஆகியோருக்கு நாம் எல்லோரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

இவர்களால் வித்திடப்பட்ட ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் திரு. கிருஸ்ணராஜா திரு. E.S. பாலசிங்கம் திரு. S. கருணலிங்கம். திரு. T. யோகநாதன் திரு இராமச்சந்திரன், திரு R.D. இரத்தினசிங்கம் தலைமையில் அமைந்த நிர்வாக சபைகளின் அயராத உழைப்பும் இந்த ஆலய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது மட்டும் இல்லாது எத்தனையோ தொண்டர்களின் பெரும் பங்களிப்பும் இந்த ஆலய வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது.

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் குறிப்பாக இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறது. குறிப்பாக ஆலய வருமானத்தில் 1/3 பங்கை நமது தாய்நாட்டு மக்களுக்கு அனுப்பி அவர்களின் துயர்துடைக்கவேண்டும் என்று முன்மொழியப்பட்டு திரு பத்மலிங்கத்தால் ஆமோதித்து கொடுக்கப்பட்ட வேண்டகோளை திரு. சொக்கலிங்கம் கருணலிங்கம் அயராது பாடுபட்டு ஆலயயாப்பிலே சேர்த்தமைக்குத் திரு கருணலிங்கத்திற்கும் அவரின் தலைமையில் அமைந்திருந்த அன்றைய நிர்வாக சபைக்கும் என் மனம் நிறைந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வெள்ளி விழாகண்டு Ruby விழாவை நோக்கி அடி எடுத்து வைத்திருக்கும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் ஆலயம் அடுத்த பதினைந்து வருடங்களுக்குக் தேவையான திட்டம் போடவேண்டிய கால கட்டத்தில இருக்கிறது. அதற்காக வருங்காலத்தில் அமையும் நிர்வாக சபைகளுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. எனக்கு நான்கு வருடங்களாக நிர்வாகசபைத் தலைவராகவும், மூன்று வருடங்களாகப் பொருளாளராகவும் இருப்பதற்கு வாய்ப்பளித்த ஆலய அங்கத்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"என் கடன் பணி செய்து கிடைப்பதே"
அம்மனைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்
வணக்கம்



உ

சிவமயம்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

# அருள்மிகு கனக துர்க்கை அம்மன் கோயில் சைவ சித்தாந்தத் தமிழ்ப் பள்ளி

சிறார்களுக்கும் பெரியவர்களுக்குமான சைவ சித்தாந்த வகுப்புகள்

**கவிஞர். கந்தையா இராஜமனோகரன்**

திருவருள்மிகு கனக துர்க்கை அம்மனின் அடியவர்களே,

எல்லோருக்கும் கோயிலின் 25 ஆண்டு கால நினைவுகள் இரைமீட்கப்படும் இன்பமான காலம் இது. நான் இதற்கு விதிவிலக்கல்லவே. என்னுள்ளமும் இரை மீட்கின்றது. எண்பதுகளின் இறுதியில் இந்நாட்டிற்குக் குடும்பமாக வந்தோம். சைவத்தையும் தமிழையும் குடும்பச் சூழலிலே இயன்றவரை பேண முயன்றோம். கோயிற் சூழலும் தேவையல்லவா...... உயர்வாசல் முருகனை அவன் கோயில் சென்று வணங்கினோம். தொண்ணூறுகளின் தொடக்கத்திலே பிள்ளைகள் கல்வியைத் தொடங்கும் பருவம். பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளியிலே சேர்த்தோம். எனினும் எம்மனம் மகிழ்ச்சியை எய்தவில்லை. தமிழையும் தமிழ்க் கலைகளையும் ஆங்கிலத்தின் ஊடாகவே பலரும் கற்பித்தனர். சைவ அறிவை ஊட்டவென எவருமே முயன்றிலர். சரியாகவும் பிழைகளோடு இணைந்துமெனச் சடங்குகள் மட்டும் பேணப்பட்டன. இவை எம் மனத்திலே மிகுந்த வலியை ஏற்படுத்தின. தமிழ்ப் பள்ளிகளிலே சமயக்கல்வியின் தேவையை உணர்த்தினேன். எவரும் உதவிலர். அப்போ ஐந்தாறு கோயில்களே இருந்தன. அவர்களுக்கு யாமே எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிக் கற்பிப்பதாக மடல் வரைந்தேன். பதிலேதுமில்லை. வேறுவழியில்லை. வீட்டிலேயே மூன்று பிள்ளைகளுக்கும் சைவ சித்தாந்தத்தைக் கற்பித்து வந்தோம்.

1998 இன் ஆரம்பத்திலே புதிதாக உதித்த கோயில்கள் சிலவற்றிற்கு மீண்டும் மடல் வரைந்தேன். அருள்மிகு கனக துர்க்கை அம்பாள் மட்டும் கடைக்கண் காட்டினாள். அறங்காவற்குழுவினர், செயற்குழுவினர் மூலமாக என்னை அழைத்தாள். குழுவினரைச் சந்தித்தேன். விளைவு... 1998 மார்ச் மாதம் 8 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 2:30 மணிக்கு யானும் என் வாழ்க்கைத் துணையும் இணைந்து வகுப்பைத் தொடங்கினோம். 65 மாணாக்கர் வந்திருந்தனர். இம் மாணாக்கரில் இருவரின் தந்தையாரான திரு நாகமணி நித்தியானந்தன் அவர்கள் இரண்டாவது வகுப்பிலிருந்து இன்றுவரை திறமைமிக்க ஆசிரியராக எம்மிலும் கூடுதலாக உழைத்து இப்பள்ளியைத் தொடர்ந்து செழிக்கச் செய்து வருகின்றார். எம் உள்ளத்திலே உவகை பொங்கியது. வெள்ளம் வருமுன் அணை கட்டத் தொடங்கியது போன்றதோர் நிறைவு. வகுப்பைத் தொடங்கிய வேளையிலே அம்மன் குடியிருக்கவே இடம் போதாது. எனினும் தேவை அறிந்து சேவையை ஆதரித்தாள். இன்று வரை எத்தனையோ சிரமங்கள், சிக்கல்கள், வசதியீனங்கள் போன்றவை ஏற்பட்டாலும் யாரும் சோரவில்லை. என்றும் கோயிலின் அறங்காவலர், செயற்குழுவினர், குருக்கள்மார், தொண்டு செய்வோர், பணிபுரிபவர், குறிப்பாகச் சமையற்கட்டிலே பணி புரிவோர், அடியவர் என அனைவருமே ஆதரவு நல்கியே வருகின்றனர்.

எக்காலத்திலும் இணையும் மாணாக்கரின் பெற்றோர் எல்லாவித உதவியும் செய்வர். சிலர் எம்மோடு

கற்பிப்பதிலே இணைவர். இவ்வாறு இணைந்தவர்களிலே யான் முன்னரே குறிப்பிட்ட திரு நாகமணி நித்தியானந்தன் அவர்களோடு, திருமதி சிவாஜினி கிருஷ்ணகுமார், திருமதி ஆனந்தி அமிர்தலிங்கம், திருமதி நாகசுலோஜனா கயிலைநாதன், திருமதி காயத்திரி சாந்தகுமார், மருத்துவர் (திருமதி) சசிகலா இராஜமனோகரன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். பல மாணாக்கர் பேருந்து, தொடருந்து போன்றவை மூலமாக 30 மைல்களுக்கு அப்பாலிருந்தும் ஒழுங்காக வருகின்றனர். இவர்கள் உட்பட அனைத்து மாணாக்கரும் பெற்றோரும் பாராட்டுதலுக்கு உரியவர்களே.

இங்கு சைவசித்தாந்தத் தமிழ் அறிவோடு பண்ணிசையும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இலண்டன் லூயிஷாம் சிவன் ஆலயத்தின் நன்மனத்தாலே அக்கோயிலின் ஓதுவார் மூர்த்திகளான சாமி தண்டபாணி ஐயா அவர்கள் இப்பணியைச் செய்கின்றார். அவர்கள் சமுகந்தரா வேளைகளிலே அடுத்த தலைமுறையினரான செல்வி காருண்யா சண்முகதாஸ், மருத்துவர் (செல்வி) அபிராமி இராஜமனோகரன் ஆகியோர் கைகொடுக்கின்றனர்.

சைவசித்தாந்த அறிவிற்குரிய அடிப்படையாக அகவைக்கேற்ற அளவிலே திருவருட்பயன் பயன்படுத்தப் படுகின்றது. பெரியவர்களுக்கு மிகச்சிறிய சைவசித்தாந்த சாத்திர நூலாகிய கொடிக்கவியும் பயிற்றுவிக்கப்படுகின்றது. மொத்தத்திலே ஆன்ம ஈடேற்றப் பாதையிலே வரும் பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்பவையும் அவற்றோடு கோயில் அமைப்பு, திருவிழாக்கள், பூசைமுறைகள் என்பவற்றுக்கான தொடர்பு போன்றவையே பாடவிதானத்தின் பெரும்பகுதியாகும். ஞாயிறு வகுப்புகளோடு பலருக்கும் உதவும் முகமாக அரைநாள் நீளமான வகுப்புகளும் ஆண்டிற்கு இரண்டாவது நடத்தப்படுகின்றன.

சாதாரண பாடசாலை விடுமுறைகள் தவிர்ந்த எல்லா ஞாயிறுகளிலும் வகுப்புகள் நடைபெறும். மிகமுக்கிய விரதநாள்கள், அருகிலுள்ள கோயில்களின் தேர்த்திருவிழா நாள்கள் போன்றவை விதிவிலக்காகும். ஒவ்வொரு ஆண்டும் தேர்வுகள் நடத்தப்பட்டுப் பெரியவர்கள் உட்பட அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். சிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்களிலே மாணாக்கரின் பண்ணிசை, நாடகம் என்பவை இடம்பெறுவது வழமை.

இவை எல்லாம் உவகையின் பக்கங்கள். இம்முயற்சியிலே கவலையின் பக்கமும் உள்ளது. இவற்றையும் இங்கு குறிப்பிடுதல் கவலையைப் போக்க வழி செய்யலாம்:

1. பதினெட்டு ஆண்டுகளின் மேலாக வகுப்புகள் நடைபெறுகின்றன. சில ஆண்டுகளிலே 120 மாணாக்கர் வரையிலே கற்றுளர். இப்போ 20 பேர்வரையே கற்கின்றனர். இக்கோயிலுக்கு வரும் அடியவர் தொகை எத்தனையோ ஆயிரம். ஒவ்வொரு தேர்த் திருவிழாவுக்கும் 15,000 பேருக்குக் குறையாத அடியவர் வருகின்றனர். நிலைமை அவ்வாறெனின், ஏன் 100 பேராவது கற்க வரவில்லை? பதில் கூறவேண்டியவர்கள் யார்? நாமா அல்லது வராதவர்களா?

2. பெரியவர்களுக்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன. பிள்ளைகளின் தாய்மாரிலே எண்மர் வரையிலே ஒழுங்காக வருவர். இதற்குப் பெரியவர்களே பதில் கூறவேண்டும்.

மேலே உள்ள கேள்விகளுக்கான பதில்களிலே சில செய்திகள் மறைந்துள. என் சிந்தையிலே உதித்தவற்றை இங்கு அவற்றைச் சீர்செய்வதற்கான வழிமுறைகளுடன் தந்து விடுகின்றேன்.

1. வகுப்புகள் கோயிலிலே நடைபெறுவதாலே மாமிச உணவுண்போரால் விடுமுறை நாளான அன்று அவ்வுணவைத் தவிர்க்க இயலாத மன நிலை. அடுத்ததாக மாதாமாதம் குறிப்பிட்ட நாட்களிலே வளர்ந்த பெண்பிள்ளைகள் வருவதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயம்.

இந்த இரண்டு காரணங்களுக்கும் கோயில் ஆவன செய்தல் வேண்டும். கோயிலுக்கு அருகிலே உள்ள சிறு வீடொன்றின் பகுதியிலே வகுப்புகளை நடத்துவதன்மூலம் சீர்செய்யலாம். வருவாய் குறையலாம். ஆனால் அடுத்த தலைமுறையின் ஆரோக்கியமான பங்குபற்றலுக்கு இச்செலவு அவசியமானது. மேலும் இவ்வாறு நடத்துவதாலே அந்நட்டத்தை ஓரளவாவது ஈடுசெய்யும் வருவாயும் ஏற்படுத்தப்படக்கூடியதே. மாணாக்கருக்கென உரிய தளபாடங்கள் இருப்பின் நகராட்சி சில உதவிகள் செய்யும். வேறாக அறைகள் கொண்ட இடம் எனின் இசை, இசைக்கருவிகள், நடனம் போன்றவற்றுக்கான வகுப்புகளையும் இலவசமாக அல்லாமல் ஏனைய இடங்களிலும் சற்றுக் குறைவான கட்டணத்திலே நடத்தலாம்.

2. பெற்றோர் கற்பதனைப் பிள்ளைகள் சிலர் முற்றாக விரும்பாத நிலைமையும் சில குடும்பங்களிலே உண்டு. இதனைப் பெற்றோர் பலர் என்னிடம் கூறியுளர்.

இது மிகவும் பிற்போக்குத்தனமானது எனினும் பிள்ளைகளுக்கு அவ்வாறு கூறவியலாது. இறப்புவரை மனிதவினம் கற்கவேண்டும் என்பதை அவர்களுக்கு விளங்க வைக்கவேண்டும். வள்ளுவன் தன் பொய்யா மொழியிலே, "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்று ஏங்குவதை நினைவுபடுத்துகின்றேன். அதாவது கற்றவருக்கு அவர் நாடு என்றோ ஊர் என்றோ இல்லை. போகின்ற இடமெல்லாம் மதிப்பு இருக்கும். எனவே யாரெனினும் சாகும்வரையும் படிக்கவேண்டுமே. ஆனால் ஏன் அவ்வாறு செய்கிறார்கள் இல்லை? மேலை நாடுகளிலே சாகும்வரை கற்பதற்குப் பல துறைகளும் வழிகளும் உள.

இம்மலரிலே இவ்வாண்டிற்குரிய வகுப்புகளின் காலவிபரம் உள்ளது. தயைகூர்ந்து தெரிந்தவர்க்கும் கூறவும். கோயில் உங்களிடம் எந்தப் பணமும் அறவிடுவதில்லை. முற்றிலும் இலவசம். அம்பாளுடைய இந்த அருளைப் பெற்றுப் பயன் அடையுங்கள்.

அவளோ ஆதி சக்தி. அவளுக்கு அடியவர்கள் கூடி அமைத்த கோயிலுக்கு அகவை 25. காலங்கடந்த அவள்போலே இக்கோயிலும் காலங்கடந்துநின்று அருள்புரிய அவள் செய்வாள் என்ற நம்பிக்கை உண்டு.

துர்முகி ஆண்டு மார்கழி மாதம் (டிசெம்பர் 2016)

## வெள்ளம் வருமுன் அணை கட்டுவதே அறிவான செயல்



## Our Temple & My Experience...

**Mrs Shantha Sundaralingam**

Ex. Committee Joint Secretary

It is very satisfying to see the temple, Shri Kanaga Thurkkai Amman Temple, celebrate its Jubilee anniversary. Not only has the temple served the Tamil Hindu community for 25 years but it has also developed to become very famous and well known across UK, Europe and Sri Lanka.

Looking back at the history of the temple, it first began in a small hall in South Harrow. There were no statues of the deities and only three framed pictures of Pillayar, Amman and Murugan. Prayers were performed here only for a short period, before the temple then moved location to Southall (Shackleton Hall) on a Friday and Wembley (Union Hall) on a Tuesday. Initially, only small crowds attended the weekly prayers, however the popularity of the temple began to grow as the temple became more well known among our community. The Elluntharily Amman was donated by the late, Mr Ratnasingham, a trustee of the Shree Ghanapathy Temple, Wimbledon.

Over the years, as the number of devotes increased, the temple had to move premises to accommodate the demand. The temple then found a derelict church which would be suitable. At the time, the temple did not have adequate funds to purchase the building, however the devotees, management and trustees raised the shortfall enabling the temple to acquire the building, in West Ealing, which is the current location.

The present wedding hall was used as the worship area, where the stage was utilised to hold the Ellunthariły Amman and the framed pictures. In the mean time, the present worship area was under renovation. Skilled workers were brought in from India to construct the Kovalam(s). The Kumbabisegam then took place with a special priest from Sri Lanka who performed the rituals. Based on his suggestions, the Kodimaram was erected and a 25 day annual festival began. The chariot day was the highlight of the festival. In the beginning years there were only a handful of ladies who performed the paal kudum as well as very few men who took part in the Kavady. As the years went by, the festival grew in size. The second Kumbabisegam then took place in 2011. Today, we find the Chariot festival to be extremely popular among our community. Over 10,000 devotees attend and many weeks and months are required to organise and co-ordinate the event. A large number of volunteers are involved.

As well as the temple's popularity in UK and Europe it is also recognised in Sri Lanka. The devotees as well as the temple have been incredibly generous in donating money to those less fortunate in Sri Lanka. This includes charities which work with orphans and war affected victims as well as supporting and promoting higher education. Orphanages were also set up by the temple.

The above is a brief reflection of how the temple has grown over the last 25 years and its positive impact on supporting the Tamil community, both in the UK as well as abroad. We should all be proud when celebrating the temple's Jubilee anniversary.



# அரவணைக்கும் எங்கள் கனக துர்க்கை அன்னையே!

**சின்னத்துரை தெட்சணாமூர்த்தி**
நிர்வாக சபை உறுப்பினர்
கட்டிட நிர்வாக குழு உறுப்பினர். (1997-2015)

உலகத்திற்கெல்லாம் தாயே, என்னிடம் குறையாத கருணையை நீ காட்டுவது ஆச்சரியமே இல்லை. எவ்வளவு குற்றங்களை மகன் செய்திருந்தாலும் அவனது தாயார் அவனைக் கொல்வதில்லை. குழந்தையின் குணாதிசயங்களைக் கொண்டு தாயார் தனது அன்பினை மாற்றிக் கூட, அவனிடம் அவனது தாயின் அன்பும், பரிவும் மாறுவதில்லை. அவள் அவனுக்காக வேதனைப்படுகிறாள். அவன் திருந்தி நல்வாழ்வு வாழவேண்டு மென்று பிரயாசைப்படுகின்றாள். அது போலவே எங்கள் ஈலிங் கனக துர்க்கை அம்பாளும் தன்னிடம் பக்தி கொண்ட எல்லா உயிர்களுக்கும் எவ்வித பேதமுமின்றி கருணை காட்டுகின்றாள். மகன் தவறு செய்யும் இயல்புடையவன். தாயார் கருணைகாட்டும் உள்ளம் கொண்டவள். அன்புகாட்டி அரவணைக்கவே செய்கின்றாள். எந்த நிலையிலும் அவன் எப்படிப்பட்டவனாக இருந்த போதிலும் தன்னைச் சரணடைந்தவனை அம்பாள் கைவிடுவதில்லை. அவனை இரட்சித்து ஞானத்தைத் தந்து நல்வழி நடத்திச் செல்கின்றாள். அபிராமிப்பட்டர் இதனை அனுபவித்துப் பாடியுள்ளார்.

"நாயேனையுமிங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் - என்ன பேறு பெற்றேன்
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே"

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையார் வாக்குப்படி மனிதப்பிறவியினால் மட்டுமே இப்பூவுலகில் இனி ஒரு முறை கற்பவாசம் இல்லாமல் இருக்க வழி செய்து கொள்ள முடியும். இதற்கு உற்ற துணையும், வழியுமாய் அமைவது சக்தி வழிபாடு. சராசரி மனிதன் வாழ்வதற்கு தேவையான பொருள் வேண்டும். அதனைப் பெறுவதற்கு நல்ல அறிவுத்திறமை வேண்டும். அப்படி ஈட்டிய செல்வம் பிறரால் தட்டிச் செல்லப்படாதிருக்க உடல் வலிவும் உள்ளத் திண்மையும் வேண்டும். இம்மூன்றும் ஆதார சக்திகளாக அமைய அம்பாள் கருணை புரிகின்றாள். அறிவிற்கு கலைமகளாகவும் செல்வத்திற்கு திருமகளாகவும் வலிமைக்குத் துர்க்கையாகவும் வடிவம் கொண்டு நமக்கெல்லாம் துணை புரிகின்றாள். ஈலிங் பதியில் கனக துர்க்கை அம்மன் குடி கொண்ட நாளில் இருந்து ஈலிங் நகரை பொலிவேற்றி மேம்படுத்தியதுடன் எமது தாயகத்தில் அல்லலுறும் சிறியோர் தொட்டு முதியோர் வரை நலம் பெற நிதி வழங்கிப் அருள்பாலிக்கிறாள். இளையோர் கல்விச் செல்வம் பெற கருணை புரிவாள்.

அம்பிகையின் தொண்டராய் பணி செய்ய அடியேனுக்கு கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். நிருவாகக் குழுவில் மட்டுமின்றி கட்டிடப் பணிகள் அனைத்திலும் அம்பிகையின் பணியில் பங்கு கொண்டமை இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து நின்றாலும் இன்று போல் உள்ளம் உவகை கொள்கின்றது. இதனையொட்டி வரும் மலர் சிறப்புறுவதுடன் அன்னையின் பணியில் தொடர்ந்து இன்புற அவள் அடி வணங்கி வாழ்த்துகின்றேன்.

ஈலிங் கனக துர்க்கை அம்மனைச் சரணடைந்து அனைவரும் அதிக வரம் பெறுவோமாக.



# காக்கும் தாயே! எங்கள் கனக துர்க்கை அன்னையே!

உலக பந்தங்களில் உன்னதமான ஒரு சொந்தம் என்றால் தாய். அந்தத் தாயின் உருவில் லண்டன் ஈலிங் பகுதியில் கோவில் அமர்ந்த உலக மக்களின் தாயாகக் காத்து அருள் பாலிக்கும் அன்னையை வணங்குகின்றோம்.

வந்து வணங்கியோரை வாழ்வித்தும் நொந்து ஏங்கியோரைத் தாங்கி வழி நடத்தியும் அருள் பாலிப்பவள் எம் அன்னை

இத்திருக்கோவில் கடந்த 25 வருடங்களாக நல் உள்ளம் படைத்த சான்றோர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சீரும் சிறப்புமாக நடைபெறுவதை நாமும் தினந்தோறும் காண்கின்றோம். முதலில் அவர்களை வணங்குகின்றோம். (அடியாரை வணங்குதல் அம்மனை வணங்குதல் போன்றதே).

இங்கு உள்ள மக்களுக்கு அமைதி, சந்தோசம் மற்றும் அறநெறிக்கு உட்பட்டு எவ்வாறு வாழவேண்டும் எனப் போதிப்பதுடன். எம் மொழி, பண்பாடு, கலாச்சாரத்தையும் பேணிக்காக்கிறது இத்திருக்கோவில் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்" மற்றும் "திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை" என்ற பெரியோர்களின் வாக்குகளுக்கிணங்க இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்குத் தனது வருமானத்தில் பெரும் பங்கினைக் கொடுத்து அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி வருகிறது.

படமாடும் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கு அது ஆகா
நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகவற்கு அது ஆமே

என்ற திருமூலரின் திருமந்திரத்தின் முதலிரு வரிகளையும் பொய்யாக்குமளவிற்கு இக்கோயிலின் மக்கள் சேவை பராட்டுதற்குரியது.

ஒவ்வொரு வருடமும் பல வேறு விசேட தினங்களில் தேவாரம், திருவாசகம் மற்றும் வேதங்களை ஓதியும் மிகவும் சிறப்புடன் திருவிழாக்களை அந்நிய நாட்டில் இருந்தாலும் தமிழ் ஈழத்தில் நடப்பதைப் போன்ற உணர்வுகளை எம் மக்களுக்கு இக்கோயில் கடந்த 25 வருடங்களாக வழங்கி வருகிறார்கள்.

துன்பங்களில் இருந்து விடுவிப்பவள் துர்க்கை என்ற வாக்கியத்திற்கு ஏற்ப அனைத்து மக்களுக்கும் அம்பாளின் அருளை வேண்டுகிறோம்.

இத்திருக்கோவில் பல சான்றோர்கள் மற்றும் ஆன்மீகவாதிகளின் உதவியுடன் ஆலமரமாய் விரிந்து வளர்ந்திருக்கிறது. இவ் ஆலமரத்தின் நிழலில் அமைதி மற்றும் நிம்மதி கொள்ளும் தொண்டராக அம்மனை வணங்கி, 25 ஆண்டு விழா சிறப்புடைய வாழ்த்துகின்றோம்

**றமணன்**

**R.S. Printers Ltd**



# ஆலய மகோற்சவங்களில் நவசந்தியில் ஓதப்படும் திருமுறைகள் (தேவாரம்)

**சிவபாதம் கணேஷ்குமாா B.A**

ஸ்தபாகா் - சா்வதேச இந்து இளைஞா் பேரவை

ஆலயம் என்பது "ஆன்மா லயப்படும் இடம்" அதாவது எங்களுடைய பாவங்கள், தீய குணங்கள் ஆகியவற்றை நீக்கி இறைவனுடைய திருவருளைப் பெறும் இடம். ஆலயங்களில் மூன்று வகையான கிரியைகள் நடைபெறுகின்றன. அவையாவன நித்தியகிரியை, நைமித்திய கிரியை, காமிய கிரியை என்பனவாகு இம்மூன்று கிரியைகளின் முழுப்பலனை தரக்கூடியது "மகோற்சவம்" ஆகும். படைத்தல் தொழிலை குறிக்கும்" துவயாரோகணம்" கொடியேற்றத்திலும் " அருளல் தொழிலைக் குறிக்கும் "துவயா அவரோகனம்" கொடியிறக்கம் அன்றும் சுவாமி வீதிவலம் வரும்போது ஒவ்வொரு திக்கிலும் விசேட வழிபாடுகள் ஆற்றப்பட்டு வேதம், பண்ணிசை (திருமுறை), நாத இசைகளால் இத் தேவா்கள் துதிக்கப்பட்டுவாா்கள் இதுவே " நவசந்தி பூசை" எனப்படும்.

இவ் நவசந்திபூசையில் ஒன்பது திக்குகளிலும் உள்ள தேவா்கள் பிரம்மா, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய தேவா்களை ஆகாயம், கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்பன அத்திக்குகள் ஆகும். இத்திசைகளில் காவல் செய்யும் தேவா்களை மகிழ்விக்க இப்பூசைகள் நடைபெறுகின்றன. விசேடமாக இத்தேவா்களுக்கு திக்குகளில் (பலி இடுதல்) திவேதனம் வழங்கப்பட்டு நவசந்திகளும் காவல் செய்யப்பட்ட பின்பே இறைவன் வீதிவலம் நடைபெறுகின்றது. இப்பூசைகளின் போது பலிபீடமும் அஸ்திரதேவரும் ஒன்பது திக்குகளிலும் வைத்து பூசைசெய்யப்பட்டு உபசாரம் செய்யப்படுவாா். ஒவ்வொரு சந்தியிலும் குறிப்பிட்ட தேவா்களுக்கான வேதமந்திரங்களும், பண் அமைவுகளும், இராகங்களும் உண்டு. இவ்வாறான முறையிலே அத்தேவா்களைப் பிராா்த்தித்து வணங்குவது முறையாகும் அவற்றுள் சில தேவாரங்களையும், பண்களையும் இராகங்களையும் குறிப்பிடுகின்றேன்.

## மகோற்சவ காலங்களிலே பாடக்கூடிய நவசந்திப் பூசைப் பாடல்கள்

**கொடியேற்றம் : கணபதிதாளம்** **பண் : பழந்தக்கராகம்**

சிறையாரும் மடக்கிளியே

இங்கே வா தேனொடு பால்

முறையாலே உனத் தருவேன்

மொய் பவளத்தொடு தரளம்

துறையாரும் கடல் தோணி

புரத்தீசன் துலங்குமிளம்

பிறையாளன் திருநாமம்

எனக் கொருகால் பேசாயோ.

**மூசுஷிகதாளம் – பிரம்மஸ்தானம்** **பண் : காந்தார பஞ்சமம்.**

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன் கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினுள் அடக்கிய வேதியனே இதுவோ எமை
ஆளுமாறு ஈவா தொன்றமக்கு இல்லையேோ
அதுவோ உனதின்னருள் ஆவகடு துறை அரனே
பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரணஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமசிவாயவே.

**இந்திர சந்தி : கிழக்குத்திசை** **பண் : காந்தாரம்**

மாதர் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்தி
புகுவார் அவர் பின் புகுவேன்
தும் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

**அக்கினிசந்தி : தென்கிழக்குத்திசை** **பண் : கொல்லி**

சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் எந்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வார்
உடலில் உறுசூலை தவிர்த் தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் நெடில்
வீரட்டானைத் துறை அம்மானே.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

**இயம சந்தி : தெற்குத்திசை** **பண் : கௌசிகம்**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே.

**நிருதி சந்தி : தென்மேற்குத்திசை** **பண் : நட்டபாடை**

அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதி தவழ் மாடவீதி
மருகநிலாவி அமைந்த சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டம் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும்
கணபதீச்சரம் காமுறவே.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலை முழவதிரும்
அண்ணா மலை தொழுவார் வினை
வழுவாவண்ணம் அறுமே.

**வருணசந்தி : மேற்குத்திசை** **பண் : சீகாமரம்**

மடலார்ந்த கெங்கன் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச சரமமர்ந்தான்
அடலா னேறூரும் மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

நெற்றிக்கண்ணுடையானை நீறேனும் திருமேனி
குற்றமில் குணத்தானை கோணாதார் மனந்தானை
பற்றிப்பாம் பரையார்த்த படிதன்றன் பனங்காட்டூர்
பெற்றென் றேறும் பிரானை பேசாதார் பேச்சென்ன.

**வாயு சந்தி : வடமேற்குத்திசை** **பண் : தக்கேசி**

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியின் உரித்தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே

அந்தநாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிர் அதனை
வவ்வினாய் உன்றன் வன்மை கண்டடியேன்
எந்தை நீ எனை நமன்சமர் நலியில்
இவன் மற்றென் அடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூருளானே.

**குபேர சந்தி : வடக்குத்திசை** **பண் : தக்கராகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சுங் கீழ்
உடையும் கொண்ட உருவம் என் கொலோ.

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட் டெம்அடிகளே.

**ஈசான சந்தி : வடகிழக்குத்திசை** **பண் : சாதாரி ஃ சாலபாணி**

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலிதேடும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

## Silver Jubilee Committee Members

Mr. S. Abayalingam
Mr. S. Biranavan
Mr. S. Jeyalingam
Mr. K. Kesavan
Mr. M.Kumaranayakam
Mrs. V. Bavan
Mr. A.Pathmanathan
Mr. K.Rajamanoharan
Mr. S.Sajiram
Mrs S. Jeyajeyam
Mr. A. Sivakumar
Mr. S. Jeyatheesan
Mr. S. Varatharajan
Mr. E.S. Balasingam
Dr. V. Paramanathan
Mr.R. Kanesarajah
Mr. Kesavarajan
Miss. Leela Ponnaiyah
Mr. Niruban
Mr. S. Premachandra
Mr. S. Ramachandran
Mrs. S. Sundalingam
Mr. K. Sarvananthan
Mr. S. Srirangan
Mr. T. Thevarajah
Mr. T. Yoganathan
Mr. K. Baskaran
Mr. P. Ganapathipillai
Mr. S. Karunalingam
Mr. N. Krishnarajah
Mr. S. Mayooran
Mr. Pathmalingam
Mr. S. Raghunathan
Mr. R.D. Ratnasingham
Mrs. S. Kanesharajah
Mr. S. Sayanthan
Mr. S. Thedchanamoorthy
Dr. A. Thevasakayam

## ஆலய குருக்கள் மார்

சிவஸ்ரீ கனகபாலகுமார குருக்கள்
சிவஸ்ரீ பாலஇராமச்சந்திராக்குருக்கள்
சிவஸ்ரீ சந்திரசேகர குருக்கள்
சிவஸ்ரீ இரவிச்சந்திர குருக்கள்
சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள்
சிவஸ்ரீ ஈஸ்வரநிலாசக்குருக்கள்
சிவஸ்ரீ கணேஷ்குருக்கள்
சிவஸ்ரீ கோகுலநாதக்குருக்கள்

## அலங்காரம்

செல்வன். செல்வராசா நிருபன்

## ஆலய பணியாளர்கள்

திருமதி. S. தினேஷ்குமார்
திரு K. சிவக்குமார்
திரு K. யோகேந்திரராஜா
திரு. M. சிவசெந்தில்நாதன்
திரு. K. சச்சிதானந்தம்
திரு S. யோகரத்தினம்
திரு. S. ஸ்ரீதரன்

# கருவும் உருவும்
# (ஆலயத் தோற்றம்)

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையின் வாக்காகும். இதற்கிணங்க மேற்கு லண்டனில் இக்குறையைப் போக்கும் நோக்குடன், திரு. பொன்னம்பலம் தெய்வேந்திரம் அவர்களும், திரு. அப்பையா தேவசகாயம் அவர்களும் முதலில் ஒன்றிணைந்தனர். குறிக்கோளைச் செயலாக்க, இவர்கள் இருவரும் திருவாளர்கள் தேவராஜன், சுரேஷ்குமார், பிரேமச்சந்திரா, இராமச்சந்திரன், அபயலிங்கம், டாக்டர் பரமநாதன், சிறீரங்கன் ஆகிய தொண்டர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். இணைப்பைத் தொடர்ந்து, இவர்களின் முதல் சந்திப்பு திரு. தெய்வேந்திரம் அவர்களின் இல்லத்தில் இடம் பெற்றது.

இவர்கள் ஒன்பது அடியார்களும், "ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளை" என்ற கருவை, உருவாக்கியதன் மூலம், அதன் ஸ்தாபக அறங்காவலர்கள் (Founder Trustees) ஆனார்கள் இவர்கள் அனைவரும், தம்மாலியன்ற காணிக்கையை ஆதாரசுருதியாக வைத்து, பணியைத் தொடங்கினார்கள். அன்பர் சுரேஷ்குமார், அறங்காவல் சபையில் இருந்து விலகிக் கொள்ள, திரு. கணேசராசா அவர்களை அறங்காவலராக அறங்காவல் சபையினர் தேர்ந்தெடுத்தனர்.

முதற் பணியாக, ஆலயத்துக்கான கால்கோள் விழாவை Harrow பகுதியிலுள்ள Honey Bon Community மண்டபத்தில், 10.08.1991 அன்று இவர்கள் நடாத்தினார்கள். கால்கோள் விழாச் சடங்குகளை, திருவிளக்குப் பூசையுடன், சென்னை காளிகாம்பாள் கோவில் குரு, வணக்கத்துக்குரிய சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் தலைமை தாங்கி நடாத்த, சிவாச்சாரியாரின் சீடரான அபிராமன் சிவாச்சாரியரும், கண்ணன் ஐயா அவர்களும் ஒத்தாசை செய்தனர். "ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்" என்ற நாமத்தை, சாம்பசிவ சிவாச்சாரியரே எமது ஆலயத்துக்குச் சூட்டினார். கண்ணன் ஐயா அவர்கள் ஆலய ஆரம்ப குருவாக, நியமனம் பெற்றார். கால்கோள் விழாவைத் தொடர்ந்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், Harrow ல் அதே மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை, பூசைகள் என்பன நடைபெற்று வந்தன.

எமது ஆலயத்துக்கு, சட்டரீதியான யாப்பைத் தயாரிக்கும்போது, பொதுமக்களாகிய அடியார்களை மனதில் வைத்து, அதனை உருவாக்கினோம். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை நன்குணர்ந்த நாங்கள், பொது மக்களுக்குரிய ஆலயமாக, எமது ஆலயம் பரிணமிக்க வேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆலயம் என்பது ஆன்மாக்கள் ஒன்றுகூடி லயிக்கும் இடம் என்பதைத் தெட்டத் தெளிவாக நாங்கள் அறிந்திருந்தோம். எமது ஆலய யாப்பை எடுத்துப் பாருங்கள்.

சகல நிர்வாகத்தையும் நிர்வகிப்பதற்கு, பொது மக்களினால், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக சபையிடமே ஒப்படைத்திருக்கிறோம். இது பொதுமக்களின் ஆலயம் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? லண்டனிலுள்ள ஏனைய பொது அமைப்புகளின் யாப்புகளோடு, எமது யாப்பை ஒப்பிட்டு நோக்குமிடத்து, அறங்காவலர், நிர்வாகத்தினர், குழுவினர் என்ற எவ்வித பேதமுமின்றி, அடியார்கள் அனைவரும் ஒன்றே, என்ற நாதம், இதில் ஒலிப்பதைக் காணலாம். அல்லும், பகலும் பாடுபட்டு, இப்படியான ஓர் சிறந்த யாப்பை உருவாக்குவதில் பாடுபட்ட சட்டத்தரணி, திருமதி காயத்ரி கதிர்காமநாதன் அவர்களின் சேவையைப், பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லையென்று கூறலாம்.

91ம் ஆண்டு பிற்பகுதியில், எமது ஆலய வழிபாட்டு மண்டபத்தை, சவுத்தோலில் இடம்மாற்றி, அங்கு வெள்ளிக்கிழமைகளில் அடியார்கள் வழிபாடு செய்வதற்கு வழிசமைத்தோம். அதே வேளை, செவ்வாய்க் கிழமை நாட்களில், வெம்பிளி நகரில், பக்தர்கள் பிரார்த்தனை செய்வதற்கும் பணியாற்றினோம். ஆலய வரலாற்றில் Honey Bon, Shackleton, (Unionhall) Pavitt ஆகிய மண்டபங்களை எம்மால் மறக்கவோ, உண்மைகளை மறைக்கவோ முடியாது.

ஆரம்பத்தில் சுவாமிப்படங்களையும், அதற்குரிய பீடத்தையும் வண்டிகள் மூலமாக, நடமாடும் கோயிலாகக் காவித் திரிந்தமை, ஆலய வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டியதாகும். 92ம் ஆண்டில் தமிழ் நாட்டின் பிரபல நடனதாரகை, திருமதி ராஜஸ்ரீ கௌதம் அவர்களை அழைப்பித்து, நிதி சேகரிப்புக்காக, "அக்ரன்" மண்டபத்தில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்ததையும், அதே ஆண்டில், விம்பிள்டன் அமரர் இரத்தினசிங்கம் அவர்கள், எழுந்தருளியான அம்மன் திருவுருவச் சிலையை, செய்துதருவதற்கு நாங்கள் ஒப்புதல் அளித்ததையும் இன்னும் எங்களால் மறக்க முடியவில்லை.

விம்பிள்டன் கணபதி ஆலயத்தால், எமக்கு அன்பளிப்புக் காணிக்கையாக வழங்கப்பட்ட, எழுந்தருளி அம்மனின் நூதனப் பிரதிஷ்டையை, அடியார்களோடு அடியராய் 29.01.1993ல் நிறைவேற்றினோம்.

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் வரலாற்றில், ஆலய ஆரம்பத்தில் இருந்து, தொடர்ந்து நான்கு வருடங்களாக, அம்மன் திருவுரு வடிவத்தை இடத்துக்கிடம் காவித் திரிந்ததுடன், பூசைகளையும் ஒழுங்காக நெறிப்படுத்திய, வணக்கத்துக்குரிய கண்ணன் குருக்கள் அவர்கள், பவன் ஐயர், குமார் ஐயர் ஆகியோர் சகிதமாக செய்த மகத்தான சேவையை இங்கு குறிப்பிடாது விட்டால், எமது கடமையிலிருந்து நாங்கள் தவறியவர்களாவோம்.

திரு. தேவசகாயம் அவர்கள், ஆரம்ப காலத்தில் அறங்காவலர் சபையின் முதல் தலைவராகப் பொறுப்பேற்று, பல பணிகளை ஆற்றியிருக்கிறார். இந்தியாவிலிருந்து அம்மன, முருகன், விநாயகர் ஆகிய திருவுருவச் சிலைகளை வடித்தெடுத்து கொண்டு வருவதில் திரு தேவராஜனும், அவரது துணைவி திருமதி பரமேஸ்வரி தேவராஜனும் அரும்பணி செய்திருக்கிறார்கள். நடமாடும் கோயில் காலத்தில் அம்மன் திருவுருவத்தை தனது இருப்பிடத்தில் ஓர் தனி வீடமைத்து, பாதுகாப்புச் செய்ததுடன் கைங்கரியங்கள் பலவற்றையும் திரு தெய்வேந்திரம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் சுவாமியின் மரப்பீடத்தை, தனது இல்லத்தில் வைத்து, காப்பாற்றி, காவித்திரிந்ததில் திரு. சுரேஷ்குமார் முக்கிய இடம் பெறுகிறார். சவுத்தோல், வெம்பிளி, ஈலிங் ஆகிய இடங்களில் நாள் தவறாது, பூசைக்குரிய செயற்பாடுகளை செய்து முடித்த, வல்லவராக திரு. கணேசராசா திகழ்கிறார். ஆலயத்துக்குத் தேவையான வங்கி வசதிகளை செய்த முடிப்பதில் திருவாளர்கள் அபயலிங்கம், டாக்டர் பரமநாதன் இருவரும் பெரும் தொண்டுகளைச் செய்துள்ளனர். ஆலயத் தொடக்க காலத்தில் செவ்வாய், வெள்ளி தவறாது, பூசைப் பணிகளைச் செவ்வனே செய்து முடிப்பதில்பெரும் பங்கு வகித்த திரு. பிரேமச்சந்திரா, ஆலய நூல்நிலையமொன்றை உருவாக்குவதில் அரும் பணி செய்தார். அறங்காவலர் சபையின் செயலாளராக இருந்து, பல பணிகள் செய்த திரு. இராமச்சந்திரன் அவர்களின் வீட்டு முகவரியை, ஆரம்ப காலங்களில் ஆலயத்துக்குரிய கடிதத்தொடர்பு இடமாக நாங்கள் பயன்படுத்தி இருக்கிறோம். நிர்வாகசபை பொறுப்பேற்பதற்கு முன்பதாக, ஆலயத்தின் முதலாவது பொருளாளர் பதவியை வகித்த சிறீரங்கன் தனது பணியை தனது சேவையாகத் தவறாது சிறப்பாகச் செய்திருக்கிறார்.

மக்களால், மக்களுக்காக அமைக்கப்பட்ட எமது ஆலயம், மக்களால் நிர்வகிக்கப்பட வேண்டுமென்பதற்காக, ஆலய யாப்புக்கமைய எமது பணிகளை, ஆலயப் பணி தொடங்கி இருவருட கால இடைவெளியில் பொதுமக்களிடம் ஒப்படைப்பதில் நாங்கள் தவறவேயில்லை. இதன் முதற் படியாக நிர்வாகசபையைப் போட்டியின்றி உருவாக்குவதில் நாங்கள் வெற்றி பெற்றோம். ஆனிமாதம் 95ம் ஆண்டில் (09.06.95) ஆலயத்துக்குரிய கட்டிடத்தை வாங்குவதற்குப் பலர், பல வழிகளில் எமக்கு உதவினார்கள். இக்கட்டிடத்தை வாங்குவதற்கு, எமக்கு ஒருமாத காலத்தில் பெரும்தொகைப் பணத்தை வாரிக் குவித்த பொதுமக்கள், எம்முடன் கரம்கோர்த்து நின்று, நிதியைத் திரட்டித்தந்த நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். வெவ்வேறு காலகட்டத்தில், நிர்வாகசபைத் தலைவர்களாகப் பணிசெய்த, சட்டத்தரணி கிருஷ்ணராசா, திரு. பாலசிங்கம், திரு கருணைலிங்கம் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் அளப்பரிய சாதனை புரிந்துள்ளனர். ஆலயக்கட்டிடத்தை வாங்குவதற்கு, வங்கிக்கடனை, குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்த கணக்காளர் திரு. பரமகுரு, இலவசமாகக் கணக்குப் பரிசோதகராகத் தொழிற்பட்ட கணக்காளர் திரு. விக்கினேஸ்வரா, தேவையேற்றபட்ட போதெல்லாம் உதவிய சட்டத்தரணிகள் திரு. இரத்தினசிங்கம், திரு. விமல் சொக்கநாதன், கட்டிடக் குழுவுக்குத் தலைமை தாங்கி அயராது. உழைத்த குமார நாயகம் ஏனைய கட்டிடக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு, அம்பாள் ஆசீர்வாதம் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

பாக்குநீரிணையில், இராமபிரான் அணைகட்டும்போது, அணில் ஒன்று மண்ணை உதறி, அவருக்கு உதவிய கதையாக, ஆலயத்தோற்ற வளர்ச்சியில் சிறதளவு நாங்கள் செய்துள்ளோம். எனினும், ஆலயத்தோற்றம், வளர்ச்சி மாற்றம், விருத்தி என்பன எல்லாம் எங்கள் சேவைகளா? இல்லையென்றே இதற்கு அடக்கமாகப் பதில் கூறுகிறோம். ஏனெனில், யோகர் சுவாமி வாக்குப்படி, "இது எப்பவோ முடிந்த காரியம்"

ஆலயத்துக்கு தன்னை அர்ப்பணித்து அம்பிகையின் அருள் அணைப்பில் சங்கமமாகிவிட்ட அமரர் பொன்னம்பலம் அமிர்தநாதன் அவர்கள் நினைவு எம்மை விட்டகலாது: நெஞ்சிருக்கும் வரை அவர் நினைவிருக்கும்.

எங்களை, இறைபணியில் ஈர்க்கவைத்த அம்பிகையின் கடாட்சம் சகலருக்கும் சுரக்க, தேவியின் பாதக் கமலங்களை இறைஞ்சுகின்றோம்.

**– அறங்காவல் சபை –**

(முதலாவது கும்பாபிஷேக மலரிலிருந்து....)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மக்கள் வாழ்விற்கு வழிகாட்டிய எமது சைவ சமயக் குரவர்களும் அவர்கள் அருளிய திருமுறைகளும்

சைவசமய மக்களாகிய நாங்கள் பக்தி நெறியில் நின்று தூய்மையான வாழ்வை மேற்கொண்டு இறைவனை அடைதலையே எமது குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். இந்த குறிக்கோளை நாங்கள் அடைவதற்கு ஏதாவது ஒரு சாதனம் இருந்தால் தான் அது சாத்தியமாகும். இதற்காக நான்கு வகையான நெறி முறைகளை எமது அருளாளர்கள் அதாவது எமது சமய குரவர்கள் அருளிச் செய்து அந்த அந்த நெறியில் நின்று தாம் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இந்த நான்கு வகையான நெறிகள் அல்லது வழிகள் ஆவன சரியை கிரியை யோகம் ஞானம் என்பனவாகும்.

சரியை மார்க்கம் என்பது சரீரத்தினால் இறைவனுக்கும் அவரது அடியார்களுக்கும் நாம் செய்யும் தொண்டாகும். அதாவது இறைவனது ஆலயத்தைத் தூய்மைப் படுத்துதல், பூசைக்குகந்த மலர்கள் கொய்தல் பூமாலை தொடுத்தல் மற்றும் அடியவர்களுக்கு அன்னசத்திரம், தண்ணீர் பந்தல் அமைத்தல் போன்ற இறை பணிகளைச் செய்தல். இங்கே இறைவன் ஆணடான் ஆகவும் அடியவர் அடிமையாகவும் உள்ள நிலைப்பாடாகும் எனவே இதனைத் தாசமார்க்கம் என்று வகைப் படுத்தியுள்ளார்கள். இந்த நெறியில் நின்று இறைவன் உலகில் வாழ்கின்ற பேறு கிட்டும் இதனை சாலோப பதவியென்று கூறியுள்ளனர். இந்த நெறியில் நின்று வாழ்ந்து எமக்கு வழிகாட்டியுள்ளவர் திருநாவுக்கரசு நாயனார் ஆவார்.

அடுத்து வருவது கிரியை மார்க்கம் இது சரீரத்தாலும் மனதினாலும் இறைவனுக்கு செய்யும்வழிபாடாகும். அபிஷேகத்திற்கான பொருட்கள் பால் நீர் மற்றும் ஹோமத்திற்கான திரவியங்களைத் சேகரித்து திருமஞ்சனம் செய்து வழிபடுதல். இங்கே இறைவன் தந்தையாகவும் அடியவன் மகனாகவும் உள்ள நிலைப்பாடாகும். எனவே இதனை சற்புத்திர மார்க்கம் என்று வகைப்படுத்தியுள்ளார்கள். இந்த நெறியில் வழிபடுபவர்கள் இறைவன் அருகில் வாழும பேறு கிட்டும் இதனைச் சாமீப பதவியென்று வகைப்படுத்தியுள்ளார்கள். இந்த நெறியில் நின்று வாழ்ந்து எமக்கு வழிகாட்டியவர் திருஞானசம்பந்த நாயனார் ஆவார்.

